தென்றல்

கிழமை இதழ்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உள்பட) விலை 16 புதிய காசு ★ வெளிநாடு 20 காசு—அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 7 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1992, பங்குனி 12 (25-3-'61) சனிக்கிழமை | இதழ் 40

ஏது முத்தமிழ்?

"மாசரா"

தமிழ், இயல், இசை, கூத்து என்று, மூன்று கூறுகளை யுடையதாய் விளங்குகிற தென்பதை அனைவரும் அறிவர்.

ஆனால், அந்தக் கூறுகளை வரம்புடன் தெளிவுபடுத்து மிடத்தில், ஆளுக்கொரு விதமாகக் கூறி குழப்பி விடுகிறார்கள்!

இந்தக் குழப்பம், பாமரரிடத்தில் மட்டுமின்றி படித்தவர்-பண்டிதர் என்போர் மத்தியிலும் இடம் பெற்றிருக்கிறது!

"முத்தமிழ் என்பதில் கூட குழப்பமா? கேலிக் கூத்துதான்!" என்று கேட்கத்தோன்றும்! என்ன செய்வது? எதிலுமே தெளிவில்லாமல் தானே, தமிழ்க் குலம் இருந்து வருகிறது!

இயல் என்பதன் பொருள் இலக்கணம்.

இசை என்பதன் பொருள் கீதம் அல்லது சங்கீதம்.

கூத்து என்பதன் பொருள் நாடகம் அல்லது நடனம்.

இவைதான் இவற்றின் பொருள் என்பதில், எவருக்கும் கருத்து வேற்றுமை இருக்க முடியாது!

ஆனால், இயல் இசை கூத்து என்னும் மூன்று கூறுகளும், தமிழில், எப்படி இடம் பெற்று இயங்குகின்றன, என்று விளக்கம் கூறுமிடத்தில், வேற்றுமைகள்-முரண்பாடுகள் தோன்றுகின்றன. அதுதான் வேடிக்கை!

"இயல் என்பது, ஒவ்வொரு எழுத்திலும் இடம் பெற்றிருக்கிறது" என்பதைப் பலர் ஒப்புக்கொள்வதில்லை!

"இயல் என்னும் இலக்கணம், உரைநடை (வசனம்)யிலும், செய்யுள் நடையிலும் மட்டுமேகாணத்தக்கது" என்று ஒரு சாரார் கருதுகிறார்கள். இது விபரீதம்!

இன்னொரு சாரார் 'இயல்' செய்யுள் வழக்கில் மட்டுமே இடம் பெறும்; உரைநடை (வசனம்) யிலும் எழுத்திலும் இயல் இடம் பெறாது; என்கின்றனர். இது விபரீதத்தினும் விபரீதம்!

இசையை எடுத்துக் கொண்டாலோ, தோன்றியபடி எல்லாம் கூறுபவரைக் காணலாம்.

இசை என்றால், தாளம் சுதியுடன் அரங்குகளில் வழங்குவதுதான் 'இசை' என்றே, பலர் கருதுகிறார்கள்!

உண்மை அதுவல்ல. ஒவ்வொரு எழுத்திலும் இசை உண்டு; உரைநடையிலும் இசை உண்டு; செய்யுளில், இசை ஏகாதிபத்தியம் செலுத்துகிறதென்றே சொல்ல வேண்டும்.

'கூத்து தமிழில் எப்படி இயங்குகிறது' என்று கேட்டால், எழுந்து வரும் விளக்கங்கள், மனிதனைப் பைத்தியமாக அடிக்கத்தக்க அளவு வரும்!

சிலர் சொல்வார்கள்; கூத்து என்றால் அரங்கங்களில் நடிகர்கள் நடத்தும் நாடகங்கள்தான் என்று.

பின்னும் சிலர் சொல்வார்கள்; கூத்து என்றால் ஆடலழகிகள் அவிநயம் காட்டி ஆடுகின்ற நடனம் தான் கூத்து என்று.

இத்தகைய விளக்கங்கள் அத்தனையும் தமிழின் தன்மை உணராதவர்களால் உத்தேசமாகச்சொல்லப் படுவதென்றே கொள்ள வேண்டும்.

"புளிய விதையின் தன்மை என்ன?" என்று கேட்டால் புளிய மரத்தைக் காட்டுவதும், "கோழி முட்டையின் தன்மை என்ன?" என்று கேட்டால் கோழியைக் காட்டுவதும் அவற்றின் தத்துவம் உணராதவர் செயல்களே ஆகும் அன்றோ?

அதுபோலவே, இயல், இசை, கூத்து, என்பதன் தத்துவம் உணராதவர்கள் கூறுவதையே, மேலே விவரித்திருக்கிறோம்.

'அ' என்று எழுதும்போதே, அது உயிரெழுத்து குறில் என்று, இலக்கணம் பெற்றதாகி விடுகிறது.

'ஆ' என்று எழுதும்போதே, அது உயிரெழுத்து நெடில் என்று இலக்கணம் பெற்றதாகி விடுகிறது.

இதுபோலவே, ஏனைய உயிரெழுத்துக்களும், உயிர் மெய்யெழுத்துக்களும், மெய் யெழுத்துக்களும், பிறக்கும்போதே இலக்கணத்துடன் இருப்பதை உணர வேண்டும்.

இந்த எழுத்துக்கள் தனித்தனியாக இயங்கும்போதே 'இசையுடன் இயங்க வேண்டும்' என்பதே தமிழின் தனிப்பெரும் மரபு.

எழுத்து வழக்கில் அகரக் குறில், அகர நெடில், என்று, குறிக்கப் பட்டாலும் அவற்றை வாயால் வழங்கும்போது, ஆ...ஞ........... ஆ...வன்ஞ என்று இசை பரவ ஒலிப்பதே தமிழின் இயற்கை.

இவ்வாறு தனித்தனி எழுத்துக்களிலேயே இலக்கணமும் இசையும் கலந்து விரவியதுடன் நிற்பதில்லை. தொடர்ந்து உரைநடையிலும், செய்யுளிலும், இசையும் இயலும் முழுமையடைந்து, அதனதன் ஆதிக்கத்தை நடத்தி வருகின்றன.

இவற்றைப் போலவே, கூத்தும் தமிழுடன் விரவி இருப்பதேயாம்.

அ. உ. இ. மூன்றும், தனி எழுத்துக்களிலேயே மூவிடச் சுட்டுப் பெயர்களாக இருக்கின்றன. மூவிடச் சுட்டுக்களே நாடகத்தின் அடிப்படையாகும். நடனத்தின் அடிப்படையும் இதுதான்.

இதுவரையிலும் முத்தமிழின் 'கரு' நிலையைச் சொன்னோம். இனி, அதனதன் 'உரு' நிலையை ஆராய்வோம்.

இயல் என்பது, எழுத்து நிலையிலிருந்து சொல்லாகி அடியாகி செய்யுளாகி வரும் ஒவ்வொரு வளர்ச்சி நிலையிலும், ஊடுருவி நிற்பதை தொல்காப்பியமும் நன்னூலும் தெளிவு படுத்தும். ஆகவே இயல் குறித்து விளக்குவது வீண் வேலையே.

இசையும் இயலைப் போலவே எழுத்து சொல் அடி செய்யுள் ஆகிய எங்கும் பரவி இருக்கிறதா? என்றால் ஆம் என்றே கூற வேண்டும்.

எழுத்திலும் சொல்லிலும் இசை பரவாத விடத்தில் அதற்கு இயக்கம் இல்லை என்றே கருத வேண்டும்.

விவரமறியாத குழந்தை ஒன்று "அம்மா வா!" என்று, தாயை அழைக்கும் ஒரு சொல்லை எடுத்துக் கொள்வோம். நுட்பமாக அதை ஆராய்ந்தால் "அம்மா வா!" என்று அழைத்த ஒலியில் இசை பரவி நிற்பதை அறியலாம்.

அந்த இசை அற்பமாகவோ, நயத்துடனோ, நயமில்லாமலோ, இருக்கலாமே தவிர, அது, இசை அல்ல என்று கூற முடியாது.

இதுபோலவே ஒவ்வொருசொல்லையும் ஒலிக்கும்போது, அதில் இசையும் கலந்து வருகிறது.

'கூத்து' என்பதும் தமிழின் பேச்சு வழக்கில் பரவி இருப்பதென்றே கொள்ள வேண்டும்.

அறியாப் பருவத்துக் குழந்தையொன்று, தங்கள் வீட்டுப் பசுங்கன்று இடறி விழுந்ததைக் கண்ணால் கண்டு தாயிடம் கூறுவதாக வைத்துக் கொள்வோம். அதைக் கற்பனை செய்துபாருங்கள்.

"அம்மா! நம்ம கண்ணுக்குட்டி அப்படி இப்படி ஓடி 'டொம்'முனு விழுந்துச்சு!" என்று கூறும்போது கைகளாலும் விழிகளாலும் கண்ணுக் குட்டியின் செயல்களை 'அவிநயம்' காட்டி, குரலிலும் அச்சம், வியப்பு முதலிய பாவங்கள் இழைந்து வர, குழந்தை கூறும்.

இதில் அடங்கி இருக்கும் தத்துவந்தான் நடனம் நாடகம் கூத்து இயல் இசை எல்லாம்.

இது போலவே, மனிதனுடைய ஒவ்வொரு பேச்சிலும் வெளிப்படையாகவோ உள்ளடங்கியோ கூத்தும் இருக்கிறது!

நாடகத்தை இவ்வாறு கொள்ளாமல், சிலர் கூறுவதுபோல், நடிகர்களும், ஆடல் அழகியரும், அரங்கங்களில் நடிப்பதுதான் நாடகம் என்றால், இசைக் கச்சேரிகளில் தாளம் சுதியுடன் ஆலாபனம் செய்வதுதான் இசை என்றும், தொல்காப்பியம் நன்னூல் படிப்பதுதான் இயல் என்றும் சொல்ல வேண்டும். அப்படிச் சொன்னால் 'முத்தமிழ்' என்பது விபரீதமாகிவிடும்.

அப்படியானால், இசைக் கச்சேரி, நடன அரங்கு, நாடக அரங்கம், என்று ஏன் சொல்கிறார்கள்? இப்படிக் கேட்கலாம்.

இசை யரங்கிலும் நடன நாடக அரங்குகளிலும் முறையே இசையும் கூத்தும் பேராதிக்கம் புரிவதால், அவை அவற்றின் ஆதிக்கப் பெயரால் அழைக்கப்படுகின்றன—அவ்வளவுதான்!

இயலும், இசையும், கூத்தும், தமிழின் பிரிக்க முடியாத உறுப்புக்கள். அவைகளை இசையரங்கில் இசை; நடன நாடக அரங்குகளில் கூத்து; என்று கொள்வோமானால், தமிழை "முத்தமிழ்" என்று சிறப்பித்துக் கூறுவது எங்ஙனம்?

(10-ம் பக்கம் பார்க்க)

பச்சையப்பன் கல்லூரிக் கவியரங்கம்

தலைவர் : கண்ணதாசன்

புன்முறுவல்



ஆக்கியோன் : மணிவேந்தன்

என்னை மகிழ்வித்தே இன்பம் தருபவளே!
கன்னல் மொழித்தமிழே! காரிகையே!—உன்னையான்
வாழ்த்துகிறேன் அம்மா! வணங்குகிறேன்! நீயின்று
வாழ்த்தி வழிகாட்ட வா!

(வேறு)

சிங்கநிகர் தோற்றம்: வாழும்
செந்தமிழின் இளமை; அன்பு
தங்குகின்ற உள்ளம், இன்பம்
தழைக்கின்ற நெஞ்சத் தோடு
தங்கநிகர் கவிகள் தந்து
தாரணியில் புகழைப் பெற்ற
பொங்குமெழில் கண்ண தாச!
புன்முறுவல் போதும்! போதும்!

(வேறு)

சீர்கெழு சிறப்புடைய கூடம்—இது
செந்தமிழ் மணங்கமழும் பீடம்—என்றும்
பார்புகழ் திறம்படைத்த
பச்சையப்பன் கல்லூரி
வாழ்க!—குறை
வீழ்க!

'புன்முறுவல்' எனுந்தலைப்பில் பாட—உங்கள்
பொன்னுதட்டில் புன்முறுவல் கூட—அந்தப்
புன்முறுவல் என்றனுக்குப்
புதுப்பொலிவை அடையவழி
காட்டும்—இன்பம்
ஊட்டும்!

குற்றம் குறையிருந்தால் நீக்கி—அதில்
குறைமதிச் செயலிருந்தால் போக்கி—என்னைக்
கற்றறிந்த பெரியோர்களே!
கல்லூரி நண்பர்களே!
காப்பீர்—கவியைக்
கேட்பீர்!

(வேறு)

பஞ்சு மெல்லடியைப் பாங்காய் ஆட்டுகின்ற
கொஞ்சும் மொழிபேசும் குழந்தை இதழோரம்
பிஞ்சு விரல்வைத்துப் பிதற்றும் போதினிலே
தஞ்சம் அடைந்திடுமாம் தங்கப் புன்முறுவல்!

காலை கழனிக்குக் கடுகிச் சென்றுழைத்து ;
மாலை வீடுவந்து மயங்கும் உழவர்தம்
வேலைக் களைப்பையெலாம் விரும்பிப் போக்குவது
வாலைக் குமரியவள் வண்ணப் புன்முறுவல்!

(வேறு)

இன்பமிகு இல்லறந்தான் சிறந்த தென்றே
எல்லோரும் சொல்லுகிறார் அதற்குத் தேவை
பண்பாக வாழ்க்கையினை நடத்திச் செல்லும்
பழகுதமிழ்க் குணங்காக்கும் பருவப் பெண்ணாள்!
அன்புடனே அத்தகைய ஒருத்தி வேண்டின்
அனைவருக்கும் காதல்எனும் உணர்ச்சி தேவை!
துன்பமிலா அக்காதல் தொடங்க; பாரில்
துயர்போக்கும் புன்முறுவல் தேவை; தேவை;

மாசில்லாக் குழந்தைகளின் புன்சி ரிப்பு
மணிக்கவிதை தந்துதவும் பூஞ்சி ரிப்பு!
சோசியர்கள் காட்டுகின்ற புன்சி ரிப்பு
சொக்கவைத்தே ஏமாற்றும் பொய்ச்சி ரிப்பு!
ஆசிகூறும் அறிஞர்களின் புன்சி ரிப்பு
அனைவருக்கும் மகிழ்வளிக்கும் அருட்சி ரிப்பு!
காசினியில் கண்ணதாசன் புன்சி ரிப்பு
கவிதந்து களிசெய்யும் புகழ்ச்சி ரிப்பு!

(வேறு)

புன்முறுவல் செய்வதிலே சிலவகைகள் உண்டு
பொய்ச்சாட்சி சொல்லுபவன் உதட்டினிலே தோன்றும்
புன்முறுவல் ஒருவகையாம்; அதனோடு சேரும்
பொருள்திருடிக் களிப்போனின் புன்முறுவ லோடு
புன்மொழியால் கோயிலிலே மந்திரத்தை ஓதிப்
பொருளீட்டும் பார்ப்பனரின் புன்முறுவல்; இன்னும்
அன்பொழுகப் பேசியுமே அடுத்தவரைக் கெடுக்கும்
அற்பர்களின் புன்முறுவல் என்றுசில உண்டு!

பொங்கலுக்குப் பணங்கேட்போன் முகத்தினிலே தோன்றும்
புன்னகைக்கு நிகர்இந்தப் புவியினிலே இல்லை!
தங்கமகன் புகழடையும் நிலைகண்ட பெற்றோர்
தம்முதட்டில் நெளியவிடும் புன்முறுவல் என்னே!
திங்களைப்போல் மின்னுகின்ற சுழற்கோப்பை பேச்சின்
திறங்காட்டும் போட்டியிலே வென்றுசிலர் வந்தால்
தங்குபுகழ்க் கல்லூரி முதல்வரதைக் கண்டு
தம்வாழ்த்தைத் தெரிவித்துப் புன்முறுவல் செய்வார்!

சொந்தநாட்டின் விடுதலையை வேண்டிநிற்கும் அண்ணன்
சோர்வில்லா முகங்காட்டும் அஞ்சாப்புன் முறுவல்!
சிந்தையிலே தெளிவின்றி 'எல்லை'யிலே நிற்கும்
செஞ்சீனா முகத்தினிலே அடங்காப்புன் முறுவல்!
இந்தியாவைச் சுற்றிவந்த இங்கிலாந்தின் இராணி
எலிசபெத்தின் எழில்உதட்டில் இன்பப்புன் முறுவல்!
எந்தமிழ்த்தாய் உருவினிலே என்னிதயம் கவர்ந்த
இன்பவல்லி காட்டுகிறாள், அன்புப்புன் முறுவல்!

பூங்காவில் நிலவொளியில் காதலியின் இன்பப்
புன்முறுவல் இளைஞனுக்குப் புதுப்பொலிவை ஊட்டும்
ஏங்குகின்ற இதயத்தாள் காதலனின் அன்பில்
இணைந்திருக்கும் போதினிலே புன்முறுவல் பூப்பாள்!
பாங்காகப் பெண்பார்க்க வருவோரைக் கண்டால்
பாவையரும் வெட்கமுடன் புன்முறுவல் செய்வர்!
தூங்குகின்ற வேளையிலும் காதலியை எண்ணித்
துயர்மறந்து புன்முறுவல் பூப்போரும் உண்டு!

(வேறு)

என்றனுளம் மகிழ்ந்திடவே கவியைக் கேட்டீர்
என்சொல்லிப் புகழ்ந்திடுவேன் உங்கள் அன்பை!
தென்றமிழில் புன்முறுவல் தன்னைப் பற்றித்
தெரிந்தவரை உங்கள்முன் பாடி விட்டேன்!
வென்றிதரும் நல்லுளத்தை எனக்குத் தந்த
வீரநெஞ்சத் திராவிடத்தின் தாயைப் போற்றி
நன்றியினைக் கூறுகின்றேன்; இறுதி யாக
நல்லோரே! கைகூப்பி வணங்கு கின்றேன்!

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 7 | 25-3-'61 | இதழ் 40

அசட்டை கூடாது!

1962 பொதுத் தேர்தலின் தொடக்க வேலைகள் நான்கைந்து மாதங்களாகவே நடை பெற்று வருகின்றன.

தேர்தல் சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் பொதுவாக எல்லாக் கட்சிகளிலும் அடிபட்டாலும், காங்கிரசிலுள்ள தீவிரம் மற்றக் கட்சிகளிடம் இல்லை என்றே கருத வேண்டும்.

கடந்த தேர்தல்கள் எதிலும் காட்டாத அக்கறையும் அவசரமும் 1962 தேர்தலில் காட்டிக் கொண்டிருக்கிறது, காங்கிரஸ்.

தமிழ்நாட்டில் மட்டுந்தான் இந்தப் பரபரப்பு; காரணம்: ஆச்சாரியாரின் சுதந்திராக்கட்சி முளைத்திருப்பதால்!" என்று, கருத வேண்டாம்,

இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் காங்கிரஸ் வட்டாரத்தில் தேர்தல் பரபரப்பு காணப்படுகிறது.

அதே நேரத்தில் "காங்கிரசை ஒழித்துக் கட்டவேண்டும்" என்று, கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிற அத்தனை கட்சிகளும் திட்டவட்டமான செயல் முறைகளை மேற்கொண்டதாகத் தோன்ற வில்லை.

காங்கிரஸ் எதிர்ப்பு இயக்கங்கள் அனைத்தும் ஒன்றுபட்டு நின்று செயலாற்ற வேண்டும் என்கிற கருத்தை, வரும் தேர்தலை முன்னிட்டு முதன் முதலில் வெளியிட்டவர் திரு. ஆச்சாரியார் அவர்கள்

ஆனால்; அத்தகைய எதிர்ப்பு முன்னணி அமைப்பதற்தான திட்டங்கள் எதுவும், ஆச்சாரியார் கூறவில்லை.

எதிர்ப்பு முன்னணி அமைத்து காங்கிரசை வீழ்த்த வேண்டும் என்ற தத்துவம் தமிழ்நாட்டைப் பொறுத்த மட்டில் புதிது என்று கூற முடியாது.

1953-ல் பல்வேறு அரசியல் கட்சிகளும் செல்வாக்கு மிக்க சுயேச்சைகளும் தோளோடு தோள் நின்று காங்கிரசை உருக்குலைத்தார்கள்.

ஆனால், கட்சிகளின் பெரும்பான்மை என்கிற சட்டத்தைக் காட்டி கவர்னர் துணையோடு காங்கிரஸ் ஆட்சிபீடம் ஏறியதை, யார் மறந்தாலும் ஆச்சாரியார் மறந்திருக்க முடியாது.

ஏனென்றால் எதிர்ப்பு முன்னணியைவிட சிறுபான்மைக் கட்சியான காங்கிரஸ், கட்சிப் பெரும்பான்மை என்கிற காரணத்தைக் காட்டி ஆட்சி பீடம் ஏறிய போது ஆச்சாரியாரை முதல் மந்திரியாக்கி அவருடைய மூக்குக் கண்ணுடியின் வலிமையை நம்பியே அரசாளத் தொடங்கியது. திருவாளர்கள் எஸ். எஸ். இராமசாமிப் படையாட்சி, மாணிக்கவேல் நாயகர் போன்ற தருணதந்திர சிரோமணிகளை மந்திரிகளாக்கி, எதிர்ப்பு முன்னணியின் வலிமையைக் குறைத்த கதைகளை நாடறியும்!

இன்று ஆச்சாரியார் மனம் திரும்பி காங்கிரசின் கூற்றுவனாக மாறியிருக்கிறார். காங்கிரசைவிட்டு விலகிய ஒரே காரணத்திற்காக நாம் ஆச்சாரியாரை வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறோம்,

அதே நேரத்தில் எதிர்ப்பு முன்னணி அமைப்பது பற்றித் தெளிவாகவும், திட்டவட்டமாகவும், முடிவு செய்து ஆகவேண்டும்.

தெளிவாகச் சொல்ல வேண்டுமானால் 1962 தேர்தலில் தமிழ்நாட்டைப் பொறுத்த மட்டில் எதிர்ப்பு முன்னணி அமைக்க விரும்புவோர் கட்சி வைதிகங்களை-கொள்கைகளை தற்காலிகமாக ஒதுக்கி வைக்க வேண்டும்.

எதிர்ப்பு முன்னணிபற்றி பேசுகிறவர்கள் கட்சிக் கொள்கைக் கடந்த விசேஷ சமிக்ஞைகளுடன் பேச ஆரம்பிக்க வேண்டும். அத்தகைய பேச்சுகள் எதிர்ப்பு முன்னணி அமைவதற்குத் தூண்டுகோலாக இருக்கும்.

ஊரில் தீப்பிடித்து விட்டால். பார்ப்பான் வீடு பறையன் வீடு, பகையாளி வீடு, உறவாளி வீடு என்று, பாகுபாடு காட்டிக் கொண்டிருக்க மாட்டார்கள்.

அப்படிப் பாகுபாடு காட்டிக் கொண்டிருந்தால் எல்லாருடைய வீடும் எரிந்து சாம்பலாவது நிச்சயம்!

காங்கிரஸ், ஊரில் பிடித்த தீப்போன்றது. வேகிற வீட்டில் பிடுங்கிய வரை இலாபம் என்றிருப்பவர்கள் தாம், இன்றையக் காங்கிரசுக்காரர்கள்!

இங்குள்ள பல்வேறு கட்சிகளும், பல்வேறு வீட்டுக்காரர்கள். இவர்கள் "பறையன்வீட்டில் தீப்பிடித்தால் பார்ப்பானுக்கு என்ன?" என்பதுபோல், பாகுபாடு காட்டிக் கொண்டிருந்தால், காங்கிரசை எந்தக் காலத்திலும் வீழ்த்தப் போவதில்லை!

காங்கிரசுக் காரர்கள், தங்களை ஆளும்பரம்பரை (Royal Family) யாகக் கருதுகிறார்கள். அவர்கள் கருதுவது கூட அதிசயமில்லை. அரசாங்க அலுவலர்கள் அத்தனை பேரும், கதர்ச்சிப்பா போட்டவனுக்கெல்லாம் குழைந்து பணிந்து நடக்கிறார்கள். பொதுமக்களும் அவ்வாறே கருதும்படி. திண்ணைப் பேச்சுகள்-ஏன் மேடைப் பேச்சிலும் கூடத்தான்-காங்கிரசுக்காரர்கள் பக்குவப் படுத்தி வருகிறார்கள். இது, எவ்வளவு ஆபத்தான நிலைமை என்பதை சிந்தித்து உணரவேண்டும்.

திறமையான நிர்வாகம் உள்ள கட்சியாயிருந்தாலும்கூட அரசாங்கச் சிப்பந்திகளும் பொதுமக்களும் ஆளுவோரை ஆளும் வர்க்கமாக (Royal family) கருதும்படி செய்துவிடும் நீண்டகாலம் ஒரே கட்சி தொடர்ந்து ஆட்சிபீடத்திலிருந்தால்! அப்படிக் கருத்து வளரச் செய்துவிடாமல், இடை இடையே ஆட்சியை மாற்றியமைக்க வேண்டும்"

என்று அமெரிக்கர் ஒருவர் கூறிய கருத்தை நாம் இந்த நேரத்தில் நினைவு படுத்திக் கொள்ளவேண்டும்.

காங்கிரஸ் ஆட்சி கடந்த 14 ஆண்டுகாலமாக இந்தியத் துணைக் கண்ட முழுவதும் பஞ்சாயத்துப்போர்டு—கூட்டுறவு சங்கங்களிலிருந்து பாராளுமன்றம் வரை ஏகபோக ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

இந்த ஆதிக்கம் காங்கிரசினுடைய நிர்வாகத்திறத்தால் கிடைத்ததுகூட அல்ல. நாட்டிலுள்ள ஜனநாயக அறிவற்ற குருட்டு நம்பிக்கைகளும், பூஜாமனோபாவமும், இரண்டு ரூபாய்க் காசைக் கண்டால் வாயைப் பிளக்கும் எச்சிற்கலைப் புத்தியும், வாங்கின பணத்திற்குத் துரோகம் செய்யக் கூடாது என்கிற கபோதித் தத்துவங்களும், காங்கிரசை ஏறிய அரியணை இறங்காமல்பாதுகாத்து வந்திருக்கின்றன.

நாட்டு மக்களின் இத்தகைய இழிவான சுபாவங்களை பலவீனங்களை நன்கறிந்து பயன்படுத்திக் கொள்கிறது. காங்கிரஸ்.

பணக்காரர்களைத் திருப்தி செய்து பக்க பலமாக வைத்துக் கொள்வது ஒன்று.

தேர்தலின் போது சில்லறை ருபாய்களை வாரி இறைப்பது மற்றொன்று.

தேர்தலுக்குப் பணம் தரவேண்டிய கறவை மாடுகள் நாட்டிலுள்ள பணக்காரர்கள்!

பணக்காரர் என்கிற மாடுகளுக்கு இரைபோடவே லைசென்சு, பெர்மிட், பஸ் ருட், இத்தியாதி.

மேற் கண்ட சாகச முறைகளே ஆயுதங்களாக இருந்து, காங்கிரசுக்கு கடந்த 14 ஆண்டுகாலமாக வெற்றிதேடிக் கொடுத்திருக்கின்றன.

இப்போதும் அந்த ஆயுதங்கள் கூர் மழுங்கி இருக்கும் என்று கருதுவதற்கில்லை. 1962 தேர்தலில் வந்தே மாதரக் கூச்சலுக்கிடையில், இந்த ஆயுதங்களைத்தான் பிரயோகம் செய்யப் போகிறார்கள்!

இந்த நிலையில் எதிர்ப்பு முன்னணியாளர் என்ன திட்டங்களைக் கையாள வேண்டும்.

நாட்டில் வளர்ந்து கிடக்கும் காங்கிரசு ஆதிக்கப் பேராபத்தை, இதுவரை கூறிய அளவுக்குமேல் புதிதாக யாரும் எதையும் சொல்லிவிடப் போவதில்லை. எனவே, பிரசார வன்மையால் புதிய மாற்றம் ஏதுவும் குறிப்பிடத்தக்க அளவு தோன்றிவிடாது. நாடு முழுதுவதும் திரட்டினால், காங்கிரஸ் எதிர்ப்பாளர் வாக்குகள் 55 சதவீதம் நிச்சயமாகக் கிடைக்கும். ஆனால், அவை பல்வேறு அரசியல் வேறுபாடுகளுக்குள் சிக்கி இருக்கின்றன. எத்தகைய தியாகம் செய்தாவது ஒரு தடவையேனும் காங்கிரசை அடியோடு மண் கவ்வச் செய்தால்தான் நாட்டிலுள்ள அரசாங்கச் சிப்பந்திகளுக்கும் பொது மக்களுக்கும் ஜனநாயகத்தைக் கண்டறியத் தக்க வெளிச்சம் ஏற்படும்.

இப்போது எல்லோரும் காங்கிரஸ் என்கிற காரிருளில் முட்டிக்கொண்டு திரிகிறார்கள்.

அத்தகைய தியாகம், கட்சிக் கோட்பாடுகளை தற்காலிகமாக விட்டு விட்டு காங்கிரசைத் தொலைப்பதில் முழு மூச்சாக ஈடுபடுவதுதான். அந்த வகையில் காங்கிரசல்லாத வாக்குகளைச் சிதற விடாமல் திரட்டவேண்டும்.

காங்கிரசைத் தொலைப்பது என்றால் 1953-ல் ஏற்பட்டதுபோல் மொத்தத்தில் காங்கிரசு தோற்றிருந்தும், கட்சிப் பெரும்பான்மை யளவில் மற்றக்கட்சிகளை வெற்றிபெற்றதுபோல் இப்போதும் விட்டால் அருத்தமே இல்லை.

கட்சிப் பெரும்பான்மையிலும், காங்கிரசே எந்தக் கட்சியையும் விடத் தாழ்ந்ததாக இருக்கவேண்டும்.

அதற்கு வழி சற்று செல்வாக்குள்ள கட்சியினருக்கு அமைச்சரவை அமைக்கும் அளவுக்கு மற்றக்கட்சியினர் விட்டுக்கொடுக்க வேண்டும். வேட்கை விண்ணப்பம் தாக்கல் செய்யுமுன்பே இன்னின்ன மாநிலங்களில் இன்னின்ன கட்சி செல்வாக்குள்ளது என்று கண்டறிந்து, அந்தந்தக் கட்சிகளுக்கு ஆங்காங்குள்ள இதர கட்சிகள் துணைநின்று வெற்றிக்கு வழிகாண வேண்டும்.

இந்த அளவுக்கு காங்கிரசல்லாத கட்சிகளிடத்தில் தாராள சிந்தை ஏற்படுமா?

அத்தகைய தாராள சிந்தை காலங் கடந்து ஏற்படுவதனாலும் பயனில்லை. இப்போதே முடிவு செய்து வெளியிட வேண்டும்-முடிவுக்கேற்றபடி சூழ்நிலையைக் கனியச் செய்வதற்கு நிரம்ப வேலை செய்தாக வேண்டும்,

தென்றல், தி மு. க. பத்திரிகையாதலாலும், தமிழகத்தில் தி. மு. க. செல்வாக்குடன் இருப்பதாலும், நாம், ஏதோ தி. மு. க. வின் வெற்றியை உட்கருத்தாகக் கொண்டு இதனைக் கூறுவதாக யாரும் கருத வேண்டாம்.

தி. மு. க. வின் வெற்றி இந்தத் தேர்தல் முடிவுடன் முடிந்துவிடக் கூடியதல்ல.

இந்தியத் துணைக்கண்ட முழுவதும் காங்கிரசு வீழ்ந்து, அதனுடைய ஆணிவேர், சல்லிவேர், அத்தனையும் அறுந்தால்தான், நாட்டில் உண்மையான ஜனநாயகம் மலரமுடியும், என்ற நடுநிலையான பரந்த நோக்கத்துடன் இதனைக் கூறுகிறோமே தவிர வேறில்லை.

இத்தகைய தாராள சிந்தையை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு முழுக்க முழுக்க அகில இந்தியக் கட்சிகளையே சார்ந்திருக்கின்றது.

ஆகையால் அவைகளே, இதில், தீவிரங் காட்டவேண்டும். வழிகாட்ட வேண்டும்.

ஆனால், கம்யூனிஸ்டுக் கட்சித்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. பூபேஷ் குப்தா அவர்கள், மதுரை நிருபருக்களித்த பேட்டியில் கூறிய கருத்துக்கள். நமக்குத் தெளிவான வழிகாட்டுவதாய் இல்லை. அத்துடன் காங்கிரஸ் ஆட்சியை ஒழிப்பதில் தீவிரம் காட்டுவதாகவும் தோன்றவில்லை. சுதந்திராக்கட்சியும் மந்தகதியிலேயே தேர்தல் பேச்சுகளை வெளியிடுகிறது.

அதே நேரத்தில் காங்கிரஸ், வேட்கையாளரை நிர்ணயம் செய்ய ஆரம்பித்திருக்கிறது. இந்த அசட்டை, எதிர்ப்பு முன்னணி அமைக்க விரும்புவோருக்கு இருத்தலாகாது.

எம். எஸ். இராமசாமி

திறவோர் காட்சி

வானுற ஓங்கிய மணிமாடங்களில், மீன்கொடி ஆடும் வியன் திருநாடு பாண்டி நாடு.

அந்நன்னுட்டில் பொன்னே கொடுத்தாலும், தந்நேர்மை குன்ருத செந்நாப் புலவர்கள் எந்நாளும் வாழும் நல்லூர், பூங் குன்றம் என்னும் சிற்றூர்.

இற்றைநாளில் அச்சிற்றூரின் பெயர் மகிபாலன்பட்டி என்பர், ஆராய்ச்சி வல்லுநர். இராமநாதபுர மாவட்டத்தில் மட்டற்ற செல்வராம் செட்டியர் வாழும் செட்டிநாட்டுப் பகுதியில் இருப்பது மகிபாலன்பட்டி.

நம்காலத்தில் வாழ்ந்து, செந்தமிழ் வளர்த்த தமிழ்ப் பெரு மகனுர், மாபெரும் பேராசிரியர் (மகா மகோபாத்தியாய) பண்டித மணி மு. கதிரேசனு (செட்டியார்)ரை ஈன்றளித்த நல்லூரும் மகிபாலன்பட்டியேயாம்.

அத்தகைய இமிழ்கடல் வறளினும் தமிழ்வளம் வறளாச் சான்ருேர்கள் வாழும் பூங்குன்றத்தில், அந்த நாளில், கணியன் என்னும் மணித்தமிழ்ப் புலவர் ஒருவர் இருந்தார். அவரது சுடர்ப் பெயருடன், தொடர்ப் பெயராக ஊர்ப்பெயரையும் சேர்த்து, ‘கணியன் பூங்குன்றனுர்’ என்று, பழந்தமிழ்க் கருவூலமாம் புறநானூறு குறிப்பிடும்.

அப்புலவர் பெருமான் ஆன்றவிந்தடங்கிய சான்ருேன். நுண்மாண் நுழைபுலமிக்க கண்ணியன். மட்குவையும், பொற் குவையும் ஒன்ருக மதிக்கும் மாட்சியாளன். அணிதேர்ப் புரவி ஆட்பெரும் படைசால் அரசரையும், பணிவாய் இரந்து பசிநோய் தணிக்கும் பஞ்சையையும், நெஞ்சகத்தில் ஓர் நிறையாக்கொள்ளும் நேர்மையாளன். இன்பமும் துன்பமும்; நன்றும் தீதும்; சாதலும் வாழ்தலும்; அவன் மட்டில் எல்லாம் ஒன்றே. தமரும் பிறரும்; பெரியரும் சிறியரும்; எவரும் அவன் முன்னுல் சரிசமமே!

அத்தகைய மூதறிவாளன், தமிழ்க்கடலின் ஆழமும், நீளமும், அகலமும், எடையும் கண்டமாபெரும் புலவனுக இருந்தும், அவன் தனது புலமையினுல், புகழ் எய்த—பொருளெய்த விரும்பவில்லை!

அவனைவிடப் பலமடங்கு குறைந்த நிலைப் புலவரெலாம் முடியுடை வேந்தர்களையும், குறுநில மன்னர்களையும், பாடிப்பரிசில் பெற்றுப் பொன்னின் கலத்தில் இன்னடிசில் உண்டு, பொற்சிவிகை ஊர்ந்து வந்த அக்காலத்தில், அவன் எந்த அரசனுடைய கொலு மண்டபத்திலும் வாய்திறந்ததில்லை-வண்டமிழ்ப் பாடி நின்றதில்லை!

ஆகவே, அந்த நல்லறிவாளன் சொல்லிய பாடலும் அதிக மில்லை-ஒன்றே ஒன்று. தத்துவம் செறிந்த தமிழ்ப்பாடல், அது.

அத்தத்துவப் பாடலும் நத்தும் புகழ் நிலைக்கச் சித்தம் கொண்டு அத்தத்துவமேதை செப்பியதாய்த் தோன்றவில்லை.

அந்த விந்தை மனிதனைச் செந்தமிழ் வல்லார் பலர், சிந்தனை யைக் கிளரும் கேள்விகளால் மடக்கியபோது, அந்த மாமேதை விடுத்த விடைகளாகவே அந்தப் பாடல் இருத்தல் கூடும் என்பது ஆராய்ச்சியாளர் துணிபு! அஃது வருமாறு :—

புலவர் பிரான், க்ணியன் பூங்குன்றனுர் பல்வேறு ஊர் களுக்கும் நாடுகளுக்கும் சென்று, நீண்ட நாட்களுக்குப் பிறகு சொந்த ஊரான பூங்குன்றம் திரும்பினுர்.

அந்தக் காலத்தில் புலவர்கள் இவ்வாறு யாத்திரை சென்று திரும்பினுல், வெறுங்கையுடன் திரும்புவது வழக்கமில்லை. ஆங்காங்குள்ள மாமன்னர்கள், மன்னரை நிகர்த்த செல்வப் பெருமக்கள் ஆகியோரைப் பாடுவதும், பரிசில் பெறுவதும், வீடு திரும்புங்கால், கரியும், பரியும், தேரும், சிவிகையும், பொன்னும் மணியும் வரம்பின்றிக் கொணர்வதும் வழக்கம்.

பூங்குன்றத்து மக்கள், புலவர்பிரான் கணியனும் அவ்வாறே திரண்ட செல்வத்துடன் திரும்புவார் என்று எதிர்பார்த்தனர்! அதில் வியப்பொன்றுமில்லை.

ஆனுல்,பெரும்புலவரும் மாபெரும்தத்துவ மேதையுமான கணி யனே போனதுபோலவே வெறுங்கையுடன் திரும்பி வந்திருந்தார்.

பூங்குன்றம் புலவர்கள் மலிந்த இடம். ஆங்குள்ள புலவ ரெலாம் கணியன் வெறுங்கையுடன் திரும்பிய காரணத்தை அறிய அவாக்கொண்டனர். ஆனுல், அந்தக் காரணம் சிந்தித்துத் தெரியக்கூடியதாக இல்லை. எனவே, அவரிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளும் விருப்புடன் அவர் இல்லத்தில் கூடினர்-வினவினர் :—

“புலவர் பெருமானே!

தாங்கள் சென்ற ஊர்களெலாம் எத்தகையவை? ஆங்குள்ள மக்களின் பண்புகள் யாவை? தங்களை நன்கு உபசரித்த நல்லூர் யாது? அத்தகு நல்லார் யாவர்?” என்றனர் புலவர்கள்.

“புலவர் பெரு மக்காள்!

யாதும் ஊரே! யாவரும் கேளிர்!”

என்ருர் கணியன்.

“நன்று! நனிநன்று!! செந்தமிழ்ப் புலவீர்! தாங்கள் சென்ற இடங்கள், துன்பமேதும் இன்றி இன்பம் பயந்தனவோ? வழியில் இடர்ப்பாடு ஏதும் நிகழவில்லையே?” என்றனர் புலவர்கள்.

ஆன்ற கேள்விச் சான்ருேரே!

“தீதும் நன்றும் பிறர்தர வாரா!
நோதலும் தணிதலும் அவற்ருேர் அன்ன”

என்ருர் கணியன்.

“மாத்தமிழ்ப் பெரியீர்!

முதுமை எய்திய தாங்கள் இது காறும் யாண்டும் போந்த தில்லை. இது போழ்து சென்றீர்கள். சென்றது போல் வறிதே மீண்டதாக எண்ணுகிருேம். இறுதி நாட்களில்—சாங்காலத்தில்-- எத்துணைப் பொருளுமின்றி இருத்தல் கவலைக்கிடம் அன்ருே?” என்றனர் புலவர்கள்.

அறிவுசால் பெருந்தகையீர்!

“சாதலும் புதுவதன்றே! வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே!
முனிவின் இன்னுது என்றலும் இலமே!”

என்ருர் கணியன்.

“மேதக்க கேள்வியோய்!

தாங்கள், புலன் அழுக்கறுத்த அந்தணுளர். தங்களைப் பொறுத்தமட்டில் இத்தத்துவங்கள் நனி சிறந்தன. ஆனுல், தங்களையே உயிர்த்துணையாய் நம்பி இருக்கும் தங்கள் இல்லக் கிழத்தியாரும், ஏனையரும், தங்கள் வாழ்நாட்களுக்குப் பின் யாதா வர்?” என்றனர் புலவர்கள்.

தமிழ்மகளின் தவப்புதல்வர்காள்!

..............................“மின்னெடு
வானம் தண்துளி தலைஇ யானுது
கல்பொருது இரங்கும் மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம் ஆகலின்”

என்ருர் கணியன்.

முற்றுங் கடந்த முதறிவாள!

“நுமக்கு யாம் கூறும் திறம் சிறிதும் இல்லேம்! தாங்கள் சென்றிருந்த பன்னுடும் பன்னகரும் மன்னர் பலர் வாழ்ந்திருப் பார். கன்னல் நிகர் தமிழ் கேட்டுப் பொன்னும், மணியும், பூந் தேரும், பாய்மாவும், வாரி வழங்கும் வள்ளல் பெருமக்களையும் கிண்டிருப்பிர்! அவர்பால் வாழ்த்துப்பா ஒன்றேனும் வழங்கியிருந் தால், அந்தப் பாடல் வையமுள்ள மட்டும் நுமது வாய்மை கூறும்! அவர் வழங்கும் செல்வம், நுமது வழி வழித் தோன்றல்களுக்கும் பயன்படும்! தாங்கள் அவ்வாறின்றி, அரிதில் பெற்ற தமிழ்ச் செல்வத்தை வறிதே நிறைத்துக் கொண்டிருப்பது கண்டு எம் போன்ற சிறியாரும் சிரிப்பாரன்ருே?” என்றனர் புலவர்கள்.

அன்புத் தமிழாய்ந்த ஐயன்மீர்!

..............“மாட்சியில்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே”

என்ருர் கணியன்.

புலவர்கள் இதற்குமேல் என்ன கூறமுடியும்? அனைவரும் ஒன்றும் கூற இயலாது விடைபெற்றுச் சென்றனர்! புலவர் பிரான் கணியன் பூங்குன்றனுர் புலவர்களின் கேள்விகளுக்கு விடையாகக் கூறிய தத்துவப்பாடலின் முழுமை இதுதான் :—

“யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்ருேர் அன்ன.
சாதலும் புதுவ தன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்
இன்னுது என்றலும் இலமே மின்னெடு
வானம் தண்துளி தலைஇ யானுது
கல்பொருது இரங்கும் மல்லல் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம் ஆகலின் மாட்சியில்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே”

(புறம் 192)

பொழிப்புரை

எல்லா ஊரும் நம்முடைய ஊரே. எல்லாரும் நமது சுற்றத் தார்களே- கேடும் ஆக்கமும் பிறர் கொடுத்து வருவதல்ல. நொந்து கொள்வதும் அது மாறுவதும் அதுபோலவே, பிறர் கொடுத்து வருவதல்ல. எல்லாம் தாமே வருவனவாம். சாதலும்கூடப் புதிதல்ல. பிறந்தது எவ்வளவு நிச்சயமோ, அதுபோலவே சாவதும் நிச்சயம். அதனுல் வாழ்வதை இனிமையானதென்று மகிழ்ச்சி கொள்ளவில்லை. வெறுப்பினுல் வாழ்வைத் துன்பம் என்றும் கருத வில்லை. மின்னலுடன் வானம் குளிர்ந்த மழையைப் பொழிதலால் அமையாது, கற்களை அசைத்துக்கொண்டு ஓடும் வளமிக்க பெரிய ஆற்றினிடத்தே, நீர் சென்ற வழியே மிதந்து செல்லும் செத்தை முதலிய மிதவைபோல் உயிர்களெல்லாம் இயற்கை வகுத்த வழியே செல்லும் என்பதை கற்றுத் தெளிந்தவர் காட்டியபடி கண்டறிந் தோம்-தெளிந்தோம். ஆகையால் மாட்சிமை மிக்க பெரியோர் களைக் கண்டு வியப்பதுமில்லை. சிறியோரைக் கண்டு இகழ்தல் அதனைவிட யாம் அறியாதது.

“புலிப்பாணி”

மேற்கு வங்க முதல் அமைச்சர்

கனம். பி. சி. ராய் அவர்களுக்கு வெள்ளிடை முடங்கல்

"அருப்பை கிழார்"

வங்க முதல்வரே, வணக்கம்.

தாங்கள் மதராசி' நிதிமந்திரி... தவறு... மதராசி மறைமுக முதன் மந்திரி, திரு. சுப்பிரமணியம் மீது நடவடிக்கை எடுக்கப் போவதாக மேற்கு வங்கச் சட்டமன்றத்தில், எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரின் கேள்விக்கு விடையளித்தபோது சொன்னீர்களாம்!

அந்தச் செய்தி இங்குள்ள நாளேடுகளில் வெளிவந்து, மதராசி காங்கிரசு வட்டாரத்தில் பெரும்பரபரப்பை உண்டாக்கி விட்டிருக்கிறது.

அதைப் பார்த்த நான், கட்டுக்கடங்காத சிரிப்பாலும், வேடிக்கையாலும், அயர்ந்தே போனேன்!

அதனுல், "இப்படி ஒரு முடங்கலாவது தீட்டிவைப்போம்" என்று எழுதினேன்-சும்மா ஆறுதலுக்காகத்தான்!

ஆமாம், மேற்கு வங்கத்தில் திடீரென்று 33 சதவீதம்-முன்னிருந்ததை விட காலே வீச அரைவீசம்-ஜனத்தொகை கூடி இருப்பதாக, ஏகாதிபத்திய ஆட்சியின் கணக் கெடுப்பில் தெரிகிறதாமே! ஏன்?

அந்தக் கணக்கினுல் வந்த தொல்லைதானே எல்லாம்! அது பொய்யா? மெய்யா? விளக்கமாக அறிக்கை ஒன்று விடுப்பீர்களா?

மேற்கு வங்கத்தில், இப்படித் திடீரென்று ஜனத்தொகை பெருகி இருப்பது வியப்பைத் தருகிறது! என்றும், 'மத்திய சர்க்கார் மாநிலங்களுக்கு வழங்கும் 5 ஆண்டுத் திட்டம் முதலிய பங்கீடுகளில், மாநிலங்களின் ஜனத்தொகை அடிப்படை கவனிக்கப்படுவதால், மேற்கு வங்கத்தில் திடீரென்று ஜனத்தொகை பெருகிவிட்டதோ!" என்றும் மதராசி மந்திரி ஒருவர் ஒரு ஐயத்தைக் கிளப்பினுல், அதில் தவறென்ன? நடவடிக்கை எடுக்கத் தக்க குற்றம் என்ன? சொல்வீர்களா?

நூறுபேர் இருந்த இடத்தில் திடீரென்று நூற்று முப்பது பேர் இருந்தால், எவருக்குமே ஆச்சரியம் ஏற்படாதா?

"அதிகப்படியான 30 பேர் எங்கிருந்து திடீரென்று முளைத்தார்கள்?" என்று கேட்பது இயற்கையில்லையா?

அதிலும் 'இந்தியத் துணைக் கண்டத்தில், உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், தமிழகம், ஆந்திரம், கருநாடகம், மலையாளம், ஆகிய எந்த நாட்டிலும் இல்லாதஅளவுக்கு, மேற்கு வங்கத்தில் மட்டும் ஜனத்தொகை பெருகியுள்ள காரணம் என்ன?" என்று தெரிந்து கொள்ள விரும்பும் எவரும் கேட்கின்ற நியாயமான கேள்விதானே!

இதற்கு விளக்கம் தருவதை விடுத்து, விசாரணையும், நடவடிக்கையும் எடுப்பானேன்?

நீங்கள் சற்று தைரியமாக இப்படி ஒரு விளக்கம் கொடுத்துவிட்டால் போகிறது:—

"இந்திய சர்க்கார் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் கொண்டு வந்தனர். அதை விளக்கிப் போதிப்பதற்காக, மேற்கு வங்க மக்கள் ஆண் பெண் அனைவரையும் அழைத்து, கருத்தரிக்கும் விதங்களையும், அதைத் தடை செய்யும் விதங்களையும், படங்களாலும், பொம்மையுறுப்புக்களாலும், விளக்கிக் காட்டினுர்கள்.

பல வகை மருந்துகளையும், கருவிகளையும், அவற்றைப் பயன்படுத்தும் விதங்களையும், விளக்கினுர்கள். பல வகைப் புத்தகங்கள் வெளியிட்டார்கள்!

இதனுல், மனக் கிளர்ச்சியடைந்த மேற்கு வங்க மக்கள், கருத்தடை முறைகளை, இரவும் பகலுமாக ஆராய்ச்சி செய்து வந்தார்கள்!

அந்த ஆராய்ச்சியின் காரணமாக பத்து மாதம் சென்று பிறக்கும் குழந்தைகள், ஆறு மாதத்திலேயே பிறந்தன. ஜனத் தொகையும் பெருகிவிட்டது. தவறு எங்களுடையதல்ல-மத்திய சாக்காருடையது!"

இதுபோல் விளக்கம் கொடுத்தால் உங்களை யார், என்ன செய்யமுடியும்?

நீங்கள், இத்தகைய நேர்மையான விளக்கம் தர அஞ்சுகிறீர்களா? அல்லது,—

உங்களுடைய உள்ளத்தில் புதைந்து கிடக்கும் உண்மைகளை வெளியிட 'இது ஓர் வழி என்று கருதுகிறீர்களா?

மக்கள் தொகையைக் கணக்கெடுத்தவர்கள் வங்க சர்க்கார் அல்ல—டில்லி சர்க்கார் என்கிறீர்கள்! சூரியன் உதயமாகும் திசைதான் கிழக்கு என்பதைப்போல!

அமைச்சரே!

இதில், எவ்வளவு கேலிக்கூத்தும் வேடிக்கையும் பொதுந்து கிடக்கின்றன-தெரியுமா? நீங்கள் அவற்றையெல்லாம் புரிந்திருக்கிறீர்களோ—இல்லையோ! எனக்குச் சிரித்துச்சிரித்து வயிற்று வலியே வந்துவிட்டது!

"ஆமாம் இதில் சிரிக்கத்தக்கதாக என்ன இருக்கிறது?" என்றுகூட நீங்கள், கேட்டாலும் கேட்கலாம்!

அப்படி, நீங்கள் கேட்பதாயிருந்தால், உங்கள் வார்த்தைகளில் ஒளிந்து கொண்டிருக்கும் கருத்துக்களுக்கு நீங்களே விளக்கம் சொல்ல நேரிடும்! இதோ:—

"மத்திய ஆட்சியின் ஜனத் தொகை கணக்கு சரியில்லை!" என்ருல், எட்டும் இரண்டும் கூட்டத் தெரியாதவனெல்லாம் மத்திய ஆட்சியில் சிப்பந்தியாக இருக்கிருன் என்று அருத்தமா? அல்லது,—

மத்திய சிப்பந்திகளின் பெருக்கல் வாய்ப்பாட்டில் 'பன்னிரண்டு நான்கு நாற்பத்தெட்டு' என்றிருந்தால், 'மேற்கு வங்க வாய்ப்பாட்டில் பன்னிரண்டு நான்கு முப்பத்தாறு' என்று இருக்குமா? அல்லது—

மத்திய ஆட்சியின்குடும்பக் கட்டுப் பாட்டுத் திட்டம் மேற்கு வங்கத்தில் கேலிக் கூத்தாகி இருப்பதை அம்பலப் படுத்த மதராசி சுப்பிரமணியத்திற்கு உரிமைகிடையாது! என்பது உட்கருத்தாக இருக்குமோ? அல்லது,—

"மத்திய ஆட்சியாளரிடம் செல்வாக்கும், மக்களிடம் செல்லாத வாக்கும் பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மந்திரிகள் ஆகியோர், அவர்களுடைய செல்வாக்கு களைப் பயன் படுத்திக் கற்பனை உலக மக்களையெல்லாம் ஜனத்தொகைக் கணக்கில் சேர்த்து பதியச் செய்து விட்டார்கள். அந்தக் கற்பனை உலக மக்கள் வாக்காளர் பட்டியலிலும் இடம் பெற்றிருப்பார்கள். தேர்தல் காலங்களில் மட்டும் எதிர்கட்சிகளுக்கு விரோதமாக வாக்களிக்க வருவார்கள். இது அந்தரங்கம். இதை வெளியிட்டு அம்பலப்படுத்தியதால், மந்திரி, சுப்பிரமணியத்தின் மேல் சீறுவதாக இருக்குமோ? அல்லது--

"என்னதான் 'இந்தியா ஒரேநாடு என்று கதறினுலும் வடநாட்டான் வேறுதான்! தென்னுட்டான் வேறுதான்!" என்ற உண்மையை, என் போன்ற (தி. மு க.) ஆட்களுக்கு உணர்த்த வேண்டும் என்கிற அக்கறையினுல், சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்து, மந்திரி, சுப்பிரமணியத்தை கண்டிக்கிற தோரணையில் "எங்கள் நாட்டில்3 மாதத்திற்குஒருபிள்ளை வீதம் பெற்ருலும், தமிழன்—அயல்நாட்டான்; அதையெல்லாம் பேச என்ன உரிமை இருக்கிறது?" என்கிற உட்பொருள் கொண்டதாக இருக்கலாமோ? அல்லது-

1962-தேர்தலில் மதராசி சுப்பிரமணியம் டில்லி அமைச்சர் ஆகிவிடலாம் என்று, கனவு காண்பதைத் தெரிந்து, அந்த இடத்தை வளைக்கும் போட்டி எண்ணத்துடன், சுப்பிரமணியத்தின் மேல் இப்படி ஏதாவது குற்றம் சுமத்தி, துரும்பைத் தூணுக்கி வைத்திருப்போம்; அது, சமயத்திற்கு உதவலாம்" என்ற முன் யோசனையுடன் குற்றம் சுமத்துவதாக இருக்கலாமோ? அல்லது--

"டில்லியின் நிர்வாகத்தில் ஜனத் தொகைக் கணக்குக் கூட சரியில்லை! இந்த அவலட்சணக் கணக்கைத் தயாரிக்க 3 நாள் அரசாங்க விடுமுறை கொடுத்து, வரிப்பணம் பாழானதுதான் மிச்சம்!" என்று டில்லியைக் குற்றம் சொல்வதற்காகச் சுற்றி வளைத்துக் கொண்டு, மதராசி சுப்பிரமணியத்தின் மேல் பாய்வதாக இருக்கலாமோ?

இப்படிப் பலவிதமாக யோசிப்பதற்கும் தங்கள் வார்த்தைகள் இடம் தருகின்றன.

நீங்கள் அந்த வார்த்தைகளை என்ன எண்ணங் கொண்டு சொல்லியிருந்தாலும் சரி; அதில், சில உண்மைகள் வெளியாகி இருப்பதை அறியும்போது, மகிழ்கிறேன்— வரவேற்கிறேன்! அவை;—

கணக்கெடுத்தவர்களின் பிசகினுலேயே மேற்கு வங்க ஜனத் தொகை 33 சத வீதம் அதிகமாகத் தெரிகிறது, என்று கண்டுபிடிக்கப்பட்டால் டில்லி நிர்வாகம் சாதாரண ஜனத் தொகைக் கணக்குத் தயாரிப்பதற்குக் கூடத் தகுதியற்றது என்பதை ஒப்புக்கொண்டாக வேண்டும்!

அதைவிட, இத்தகைய கணக்குகளை ஒப்பு நோக்கி ஆராய்ந்து ஐயத்தைக் கிளப்பிவிடும் நுண்ணறிவு இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகத்தில் மட்டும்தான் இருக்கிறதென்று மிக மிக முக்கியமாக ஒப்புக் கொள்ள வேண்டும்!

கணக்கில் பிசகு ஒன்றும் இல்லை. மேற்கு வங்கத்தில் பிள்ளைப்பேறு இப்போதெல்லாம் மும்மூன்று மாதம் தான்! முன்போல் 10 மாதம்-275 நாள் ஆவதில்லை, ரிஷி பிண்டங்கள்! என்று கண்டுபிடிக்கப்பட்டால் "திராவிட-தமிழக சோணகிரிகளே! குடும்பக் கட்டுப்பாடு உங்களுக்கு மட்டும் தான்!" என்று திராவிடத்திற்கு எச்சரிக்கை செய்வதாகக் கருத வேண்டும்!

இப்படிப்பட்ட கணக்குத் தகராறுச் செய்திகள், முதன் முதலில் டில்லி செங்கோட்டையிலிருந்து வர வேண்டியதே முறை-நியாயமும்கூட, இந்தச் செய்தியோ சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலிருந்து வெளியாகி இருக்கிறது.

இதிலிருந்து டில்லி நிர்வாகத்தின் தலையுறுப்பு காலியாகவோ இடந்த வறியோ இருக்கிறதென்று கருத வேண்டும்! அல்லது டில்லி வங்கத்தின் மேல் கொண்டுள்ள அபிமானத்தின்-சமிக்ஞைகளில் ஒரு பகுதி என்று கருத வேண்டும்.

எல்லாவற்றும் மேலாக, திராவிடன்-தமிழன், வடவனுக்கு அந்நியன்என்பது விஞ்ஞான ரீதியாக மீண்டும் ஒரு முறை இதனுல் விளக்கப்படுகிறது!

(10-ம் பக்கம் பார்க்க)

கில்லாடி முத்தன் எம்.எல்.ஏ.

"அருப்பை கிழார்"

—சென்ற இதழ்த் தொடர்ச்சி—

இதற்கு என்ன சொல்வதென்று தோன்றுதவனாய் தயங்கிக் கொண்டே

'மறியல் அண்ணைக்கிருந்து தானுங்க'' என்றான் முத்துசாமி.

அதற்குமேல் தருண தந்திரத்திற்கு கேள்வி ஓடவில்லை. ஏனென்றால், அவன் மறியலிலிருந்து ஆரம்பிக்கிறான் அல்லவா!

உடனே பேச்சின் போக்கை மாற்ற எண்ணி,

''ஆமா தம்பி, உங்கிட்டே கதர் வேட்டி இருக்கா?

''இல்லைங்க''

''அடடா! சிறை சென்ற தியாகி கதர் வேட்டி இல்லாமல் இருக்கலாமா? சரி: சரி: வா, கதர் வஸ்திராலயத்திற்கு போவோம்'' என்றார்.

முத்துசாமிக்கு இரண்டு கதர்வேட்டி; இரண்டு கதர் ஆபாரம்; இரண்டு பெரிய துண்டுகள்; இத்தனையும் வாங்கப் பட்ட பின்பு எல்லோரும் உடும்புக்குடி போய்ச் சேர்ந்தார்கள்.

மறுநாள் தியாகிகளுக்காகப் பாராட்டுக் கூட்டம் ஒன்று நடந்தது. அந்தக் காலத்தில் ஒலி பெருக்கி இராது. திருவாளர் தருணதந்திரம்பிள்ளை அவர்கள் பொதுக்கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்கள். மூங்கிலூரிலிருந்து புளுகுணிபுங்கப்பா என்பவரும், வெத்து வேட்டு வீரய்யா என்பவரும், பேச்சாளர்க அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களும் மேடையில் வீற்றிருந்தனர்.

தருணதந்திரம் பிள்ளையின் பண்ணையாட்கள் நூற்றுக்கணக்கான பேர் இருந்தனர். அவர்களெல்லாம் தங்களின் எஜமானரைக் கௌரவப்படுத்தி, அதன் மூலம் அவருடைய நட்பையும், நல்லெண்ணத்தையும், பெருக்கிக் கொள்ளலாம் என்கிற எண்ணத்துடன் ஆளுக்கொரு மலர்மாலை வாங்கிக் கொண்டு கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். ஆனால், அவர்கள் விரும்பியபடி மேடையில் ஏறவோ. தங்களுடைய கருத்தை நாலுவார்த்தைகளில் வெளிப்படுத்தி மாலை சூட்டவோ, தெரியாத—பழக்கமில்லாத விவசாயிகளாக இருந்ததால், கையில் மாலையை வைத்துக் கொண்டு, செய்யும் வகை தெரியாமல், மேடையோரம் நின்று கொண்டிருந்தார்கள். ஆனால், அவர்களுடைய உட்கருத்து தருணதந்திரம் பிள்ளைக்குத் தெரியாமலிருக்குமா? அவர்களைப் பார்த்து சற்று அதிகாரத்துடன் :-

''என்ன மாலை கொண்டு வந்திங்களா? சரி: அதையெல்லாம் மேடையில் வைத்துவிட்டுப் பேசாமல் முன்னால் வந்து உட்காருங்கள்!'' என்றார்.

அப்படியே, ஒவ்வொருவராக வந்து என் கழுத்தில் போடுங்கள் என்று சொல்லவில்லையே என்கிற வருத்தம் தான் அவர்களுக்கு! என்ன செய்வது?

அவர் சொன்னபடி எல்லாரும் உட்கார்ந்தார்கள். முத்துசாமியின் அருமை நண்பர்களான சூதாடிகள், குடியர்கள், முடிச்சுமாறிகள், ஆகிய அனைவரும் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள்.

அவர்களுக்கெல்லாம் அது, காங்கிரசுக் கூட்டமாகத் தோன்றவில்லை. தங்களுடைய நண்பன் ஒருவனுடைய பேரால் ஏதோ வைபவம் நடப்பது போன்ற உணர்ச்சியே ஏற்பட்டது.

அதிலும், அவர்கள் கற்பனைகூடச் செய்திருக்கமுடியாத ஒரு புதிய கௌரவத்தையும், புதியவர்கள் தொடர்பையும். அவர்களின் நண்பன் அடைவதாக எண்ணியதால், அவர்கள் எல்லாரும் ஒருவித பரபரப்புடன் காணப்பட்டனர்.

அரசாங்க ஒற்றர் ஒருவர் மேடைக்குப் பக்கத்தில் இருந்து, எதையோ எழுதிக்கொண்டிருந்தார். தருணதந்திரம் பிள்ளை முன்னேற்பாட்டின்படி ''யங் இந்தியா'' ''இந்து'' ''சுதேசமித்திரன்'' ஆகிய பத்திரிகை நிருபர்களும் வந்திருந்தார்கள்.

கூட்டம் ஆரம்பமாயிற்று, தருண தந்திரம் பேசிய தலைவர் முன்னுரை இதுதான்:-

உடும்புக்குடி மகாஜனங்களே,

அவதார புருஷரான மகாத்மாவின் கட்டளைப்படி பத்து மாதங்களுக்கு முன்னால் நமது ஊரில் நடந்த கள்ளுக் கடை சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்ளும் பாக்கியம் எனக்கு கிடைக்கவில்லையே என்று நான் ஏங்கிக்கொண்டிருந்தேன். நேற்றைய தினம் மதுரை மத்திய சிறையில் விடுதலையான இந்த (சுட்டிக்காட்டி) தியாக மூர்த்திகளைத் தரிசித்த பிறகு எனக்குள்ள ஏக்கம் ஓரளவு குறைந்தது. ''நாம் கொடுத்து வைக்கவில்லை'' என்று, என்னை நானே சமாதானம் செய்துகொண்டேன். என்று திக்கித் திணறிச் சொல்லிவிட்டு, அவர் மறியலில் கலந்துகொள்ள முடியாமல் இலங்கை போக நேரிட்டதற்கு ஏதேதோ காரணம் சொல்வதுபோல் தனக்குள்ள செல்வம் செல்வாக்கு ஆகியவற்றைச் சொல்லி முடித்தார். முடிக்கும்போது ''வந்தேமாதரம்'' என்று எல்லாரையும் சொல்லும்படி கேட்டுக்கொண்டார். அதன்படி எல்லாரும் வந்தே மாதரம் சொன்னார்கள்.

அதன்பிறகு முறையே புளுகுணி புங்கப்பாவும், வெத்துவேட்டு வீரய்யாவும், சிறைசென்று மீண்டவர்களை வானளாவப் புகழ்ந்து பாராட்டினார்கள். இடைஇடையே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் மகாத்மாவின் தபோபலத்தால் கருகிவருவதாகவும் சொன்னார்கள்.

இறுதியாக சிறைசென்று மீண்டவர்கள் பாராட்டுக்கு நன்றி கூறவேண்டிய கட்டம் வந்தது.

நமது முத்துசாமிக்கு காலும் கையும் உதறலெடுக்க ஆரம்பித்தது.

அவனுக்கு சிறைச்சாலையில் மு, த், து, முன்றெழுத்துக் கற்றுக் கொடுத்த ஆசிரியனான பழனிமுத்துவிடம் காதோடு வாயாகச் சொன்னான்;

''பழனி, இதெல்லாம் கட்டாயம் சொல்லணுமா? எனக்கு இப்பிடி கூட்டங்களிலே பேசிப் பழக்கமே இல்லையே-பயமா இருக்கே என்ன செய்யறது.''

''பயப்படாதே! முதலில் நான் தான் பேசுவேன் அதைப்பார்த்து நீயும் அப்படியே பேசிவிடலாம்''

''அதெப்பிடி முடியும்? நீ பேசறதெல்லாம் நெனைவிலே தங்குமா?''

''முதலில் ஆரம்பிக்கிறதும், கடைசியில் முடிக்கிறதும்மட்டும் நினைவில் வைத்துக் கொள். நடுவிலே பேசறதெல்லாம் ஜெயிலில் சாப்பிட்டது, வேலை செய்தது, தூங்கினது, மூட்டை கொசு கடித்தது, இவைகளை வரிசையா சொல்லி வந்தால் போதும்''

''என்னமோ, பழனி கையும் காலும் இப்பவே நடுங்குது! எப்படி......''

இதற்குள், ''தியாகி பழனிமுத்து பிரசங்கம் பண்ணுவார்'' என்று தலைவர் சொன்னார், ஆகவே, அவன் எழுந்து பேசுவதற்குப் போனான். முத்துசாமி அவன் பேசுவதை மிகவும் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான். கடைசியில் பழனிமுத்து சொன்னான்: நாங்கள் சிறையில் எங்கள் அருமைத் தலைவர் முத்துசாமியின் அன்பு நிறைந்த இன் சொற்களாலும், தேறுதல்களாலும், கவலை கஷ்டங்களை மறந்து பத்துமாதங்களைக் கழித்தோம். உண்மையில் பாராட்டப்பட வேண்டியவர் அவர்தான் என்று முத்துசாமியை வானளாவப் புகழ்ந்து கூறினான்.

எனவே, முத்துசாமியைப் பேச அழைக்கும் போது தலைவர் அவனை சிறப்பான முறையில் கூட்டத்திற்கு அறிமுகம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

அத்துடன் ஸ்ரீமான் தருணதந்திரத்திற்கு. தான் எதிலும் மாட்டிக்கொள்ளாமல் தலைவர் என்ற பெருமையும் வகித்திருப்பதை பொதுக்கூட்டத்தில் யாராவது 'குத்தல்' செய்து பேசிவிடக் கூடாதே என்கிற பயமும் இருந்ததால், ஒவ்வொருவரையும் 'இல்லாத புகழுரைகள்' எல்லாம் சொல்லிக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தார்.

முத்துசாமி மிக மிகப் புதியவனாக இருந்ததாலும், உடும்புக்குடி தலைவர் என்று சிறைச்சாலையில் பட்டம் பெற்றிருந்ததாலும், அவனைப்பற்றி தருண தந்திரத்திற்கு ஒருவித அச்சம் ஏற்கனவே இருந்ததல்லவா? இப்போது பழனிமுத்து அவனை மிக உயர்த்திப் புகழ்ந்து பேசிவிடவே தலைவர் மற்ற யாரையும்விட சற்று அதிகமாகவே புகழ்ந்து கூற வேண்டியதாயிற்று.

எனவே, அவர் சொன்னார்:

மகாஜனங்களே! நமது உதிரமாடக் கொத்தனார் மகன் முத்துசாமி சிறந்த தேசபக்தர்; இயற்கைஞானி: சத்தியாக்கிரகத் தொண்டர்களுக்குத் தலைமை தாங்கிச்சென்ற மகாவீரர்; உடும்புக்குடி செய்த தவப்பயன்; அவர் இப்போது உங்கள் முன்னால் விரிவாகப் பேசுவார். நீங்களெல்லாம் அவருடைய பிரசங்கத்தை அமைதியாக இருந்து கேட்கவேண்டும் என்று கூறியதுடன், மேலும் ஏதேதோ சொல்லி அறிமுகம் செய்தார்.

பொதுக் கூட்டம் எள் விழுந்தால் கூட சத்தம் கேட்கும் அளவு அமைதியாக இருந்தது.

முத்துசாமி மெதுவாக எழுந்து முன்னால் வந்து நின்றான். கால் கைகள் மெதுவாக நடுங்கின. ஒரு நிமிடம் அமைதியாக நின்று சமாளித்தான். கொஞ்சம் நடுக்கம் குறைந்தது. உடனே பேச ஆரம்பித்தான். திக்கித் திணறி:—

ம—கா...ஜன...ங்...களே! என்றான். மேலே எதுவும் சொல்லமுடியவில்லை. பிறகு ஒரு நிமிடம் நின்றான் தலைவரவர்களே!...என்றான். பிறகு என்ன சொல்வதென்று தோன்றவில்லை. மேலும் ஒரு நிமிடம் கழித்து ''வந்தே மாதரம்'' எல்லாரும் சொல்லுங்கள் என்றான்.

இப்படி ''எல்லாரும் சொல்லுங்கள்'' என்று சொல்லச் சொல்வது, உடும்புக்குடியில் தருணதந்திரம் ஒருவர்தான். வேறு யாரும் அப்படிச் சொல்லிப் பழக்கமில்லாததால் தலைவர் தருண தந்திரம் உட்பட கூட்டத்திலிருந்த அனைவரும் ஒரு கணம் திகைத்து நின்றார்கள். சிலர்மட்டும் மெதுவான குரலில் ''வந்தேமாதரம்'' என்றார்கள். உடனே முத்துசாமி சொன்னான். ''எல்லாரும் சத்தம் போட்டுச் சொல்ல வேண்டும்! இப்படி மெதுவாகச் சொன்னால் எங்கேயோ இருக்கிற வெள்ளைக்காரனுக்கு எப்பிடிக் கேட்கும்''என்றான்,

அவன் இப்படிச் சொன்னது கூட்டத்தை சிரிப்பில் ஆழ்த்தியதுடன் கூடவேஎல்லாரையும் ''வந்தேமாதரம்' என்று பலத்த, கோஷம் போடத் தூண்டியது. தொடர்ந்து அவன் போலீசாரிடம் அடிப்பட்டது; ஜெயிலில் கேழ்வரகுக்களி போட்டது; ஜெயிலில் வார்டன்கள் செய்யும் அட்டகாசங்கள் கொசு மூட்டை கடித்தது; எல்லாம் சொல்லி முடித்து இறுதியாக, இவ்வளவு புகழுக்கும் காரணம் ஸ்ரீமான் தருண தந்திரம் பிள்ளைதான் என்றும் அவர் ஏற்பாடு செய்திரா விட்டால் தனக்கு இத்தகைய பாக்கியம் கிடைத்திரா தென்றும் சொல்லி முடித்தான்.

''தருணதந்திரம்பிள்ளை ஏற்பாடு செய்திரா விட்டால்'' என்று, முத்துசாமி குறிப்பிட்டது, அந்தப் பொதுக் கூட்டத்தையும், அதில், தனக்கு ஏற்

பட்ட பெருமையையும், மனதில் கொண்டு குறிப்பீட்டதுதான். பேசிப் பழக்க மற்ற அவனுல் அதை விளக்கிச் சொல்ல முடியாமல் போனதால் கூட்டத்திலிருந்தவர்கள் அனைவரும் "இலங்கைக்குப் போனுலும் தேசபக்தரான தருணதந்திரம்பிள்ளை மறியலுக்கு சரியான தலைவர் ஒருவரை-முத்துசாமியை நியமித்து விட்டுத்தான் போயிருக்கிருர்" என்று நினைத்துக் கொண்டார்கள்.

தருணதந்திரம் பிள்ளையோ, முத்துசாமி மிகப் பெருந்தன்மையுள்ளவன் அதனுல், அவருக்குச் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்ள வில்லை என்ற கெட்ட பெயர் ஏற்படக்கூடாதென்று பொய் ஒன்றைச் சொல்லிக்கௌரவப் படுத்துகிருன் என்று பூரித்துப் போனுர்.

கடைசியாக தலைவர் முடிவுரையில் தருணதந்திரம் பிள்ளை பேசும்போது முத்துசாமியை மிகவும் பாராட்டிவிட்டு முத்துசாமியை நான் இவ்வளவு கெட்டிக்காரர் என்று நினைக்கவே இல்லை. அவர் மகா கில்லாடியாக இருக்கிருர்—கில்லாடி முத்துசாமி என்று சொல்லப்பட வேண்டியவர் என்று பேசி முடித்தார்.

தலைவருக்கும் சிறை சென்று மீண்டவர்களுக்கும் ஏராளமாக மலர் மாலைகள் சூட்டப்பட்டன. இரவு தருணதந்திரம் பிள்ளை வீட்டில் சிறை மீண்டவர்களுக்கும், வெளியூரிலிருந்து வந்த பேச்சாளர்கள் பத்திரிகை நிருபர்கள் அனைவருக்கும், தடபுடலாகவிருந்து நடந்தது.

இது நடந்த மூன்ருவது நாள் சென்னையிலிருந்து வெளியான நாளேடுகள் அத்தனையிலும் தியாகி "கில்லாடி முத்துசாமி சிறை மீண்டார். உடும்புக்குடி பாராட்டுக் கூட்டத்தில் ஸ்ரீமான் தருணதந்திரம் பிள்ளை புகழ்மாலை" என்று பெரிய பெரிய எழுத்துக்களில் தலைப்புக்களிட்டு முன் பக்கத்தில் செய்திகள் வெளியாகி இருந்தன.

பத்திரிகையில் "கில்லாடி முத்துசாமி" என்று பெயர் வெளியான பிறகு காங்கிரஸ்காரர்கள் பலர் முத்துசாமியைப் பார்க்க வந்தனர். உறவு கொண்டாடினர்.

அதன் பிறகு பல ஊர்களில் பொதுக்கூட்டங்களில் பேசுமாறு முத்துசாமியை அழைத்தார்கள். இப்படி அவன் ஒரு பேச்சாளன் என்று காங்கிரஸ் வட்டாரத்தில் பேர் பெற்ருன். எல்லா ஊர்களிலும் அவன் பேருக்கு முன்னுல் 'கில்லாடி' என்ற அடைமொழி சேர்த்தே விளம்பரம் செய்தார்கள்.

ஆனுல், அவனுடைய பழைய சூதாட்ட நண்பர்களுக்கு, முத்துசாமியின் இந்த மாற்றம் அளவுக்கு மிஞ்சின எரிச்சலை உண்டாக்கிவிட்டது.

ஏனெனில் முத்துசாமி இப்போதெல்லாம் அவர்களைக் கண்டால் முன்போல் அளாவளாவிப் பேசுவதில்லை. சூதாட்டம் நடத்த இடம் தருவதில்லை. எனவே, அவனுடைய புதியபோக்கைக் கண்டு பழைய சூதாடிகள் அனைவரும் வெறுக்கத் தலைப்பட்டனர்.

அந்தச் சூதாடிகள் வெறுப்போடு சொன்ன சுருக்கப் பெயர்தான் "கில்லாடி முத்தன்" என்பது. உடும்புக்குடி வாசிகளில் காங்கிரஸ் காரர்களும், காங்கிரசு ஆதரவாளர்களும், முத்துசாமியை 'கில்லாடி' என்று செல்லமாக அழைப்பார்கள். எதிலும் சம்பந்தப் படாத பொதுமக்கள் 'கில்லாடி முத்துசாமி' என்று அழைப்பார்கள். அந்த சூதாடி நண்பர்கள் மட்டும் அவனை 'கில்லாடி முத்தன்' என்றே, குறிப்பிட்டு வந்தார்கள்.

ஆனுல், காலக்கிரமத்தில் எல்லாப் பெயர்களும் மறைந்து "கில்லாடி முத்தன்" என்ற பெயர்தான் பேச்சு வழக்கில் நிலைபெற்றது. ஆகவே, நாமும் இனி அந்தப் பெயராலேயே குறிப்பிடுவோம்.

கில்லாடியின் வாழ்க்கையில் ஏற்பட்ட இந்தத் திருப்பத்தின் காரணமாக சூதாட்டத்தலைவன் உத்தியோகம் ஒழிந்தது. பதிலாக, பேச்சாளன் தேசபக்தன் என்ற பெருமைகள் ஏற்பட்டன.

இதனுல், முத்தனுக்கு முன்போல் செலவுக்குப் பணம் கிடைக்கவில்லை. ஆனுல், வயிற்றுச் சோற்றுக்கு குறைவில்லை.

தினசரி புதுப்புது ஊர்களுக்குப் பேச்சாளனுகப் போய் வருவதும், ஆங்காங்கு சாப்பிட்டுவிட்டுத் திரிவதும், வயிற்றுக் கவலையை மறக்கச் செய்தன. பல்வேறு புதிய மனிதர்களின் பழக்கங்களும், பொதுக்கூட்டங்களில் தியாகி, கில்லாடி, தவப் புதல்வன் என்பனபோன்ற புகழுரைகளும், கில்லாடிக்கு புதிய மகிழ்ச்சியை அளித்தன. சிறையில் இருந்த பத்து மாதமும் குடிப்பதை அடியோடு விட்டுவிட்டதால், கைச் செலவுக்குப் பணம் வேண்டும் என்ற மன உளைச்சல் எதுவும் அவனுக்கு ஏற்படவில்லை.

ஆனுல், அவன் பழகும் தலைவர்கள் பலரும் பெரிய பெரிய மிட்டாதார், மிராசுதார், வக்கீல்கள் ஆகிய மேட்டுக்குடியினராக இருப்பதைப் பார்த்த பிறகு 'தன்னுடைய வாழ்வு ஏன் இவ்வளவு கீழ்த்தரமாக இருக்க வேண்டும் ?' என்ற கேள்வி அடிக்கடி அவன் மனதைக் குடைந்தது.

அதே நேரத்தில், எல்லாரும் மனைவி மக்களுடன் இன்பமாக வாழும்போது, தான் மட்டும் 'தனிக்கட்டை'யாய் இருப்பது அவனுக்கு ஒருவித ஏக்கத்தையும், தாழ்வு மனப்பான்மையையும், ஏற்படுத்திவிட்டன.

சுருக்கமாகச் சொன்னுல் குடும்ப வர்ழ்வுபற்றிய பற்றுதல் அவன் உள்ளத்தில் தலைதூக்கி வளர்ந்தது, என்று சொல்லலாம்.

இத்தகைய ஆசாபாசங்கள் வளரும் போது "நாம் படிப்பு வாசனையற்ற முடனுக இருக்கிருேமே" என்கிற தன்னிலையறிவும் அவனுக்குத் தோன்றும். ஆனுல், கல்லாமையை எப்படியாவது சமாளித்துக்கொள்ளலாம் என்கிற தன்னம்பிக்கை தோன்றி தன்னிலை அறிவைப் புறக்கணித்து விடச் செய்யும்.

இப்படிப்பட்ட மனப் போராட்டத்திற்கு இடையிலேயே அவன் பல ஊர்களுக்குப் போய் பிரசாரம் செய்து வந்தான்.

படிப்பே இல்லாத ஒருவன் மேடையில் ஏறி என்ன பேசமுடியும் என்று கேட்கலாம்.

அந்தக் காலத்தில் பேச்சுத் திறன் பற்றி யாரும் ஆராய்வதில்லை. காந்தி மிக்க நல்லவர் அவதாரபுருஷர் என்று புகழ்வதும்: நர்ட்டில் ஏற்படுகிற சகல கேடுகளுக்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்தான் காரணம் என்று சம்பந்தா சம்பந்தம் பாராமல் சொல்வதும்தான் பெரிய பேச்சாளர்களின் கொள்கைகளாக இருந்தன.

கில்லாடி போன்ற சிறை சென்ற தியாகிகள், சிறைச்சாலை அனுபவங்களையே கூட்டியும் குறைத்தும் மணிக்கணக்காக— சொல்லிக்கொண்டிருப்பார்கள். அதோடு பேச்சு முடிந்துவிடும்.

அரசியல் தத்துவங்கள்பற்றி யாரும் பேசுவதில்லை—பேச வேண்டிய அவசியமும் ஏற்படவில்லை. காரணம் : காங்கிரசினுடைய கோட்பாடுகளில் ஓட்டை பீற்றல் சொல்லக்கூடியவர்கள் ஒருவருமில்லாததே.

ஆகவே கில்லாடி போன்றவர்கள் 10 மாத சிறை அனுபவங்களைச் சொல்லியே பேச்சாளனுக—தலைவனுக உயரமுடிந்தது.

இவ்வாறு கில்லாடியின் பேரும் புகழும் பரவி வருவதைக் கண்ட ஸ்ரீமான் தருணதந்திரம் பிள்ளை அவனுடைய நட்பை வலுப்படுத்திக்கொள்ள விரும்பினுர்.

ஓய்வு நேரங்களிலெல்லாம் ஆளனுப்பிக் கூப்பிடச் சொல்வார். அடிக்கடி கில்லாடிக்கு விருந்து நடத்துவார். அவனை அழைத்துக்கொண்டு தன்னுடைய தோட்டம் வயல்களுக்குப் போவார். வழியெல்லாம் கட்சியின் வளர்ச்சிபற்றி அவனேடு பேசுவார். இடை இடையே அவனுடைய திருமணம் சம்பந்தமான பேச்சுகளை ஆரம்பித்து, அவனுடைய உள்ளத்தின் அடித்தளத்தை ஆராய்வார்.

இதனுல், அவர்கள் இருவருக்கும் இடையில் ஒருவிதப் பாசம் வளர்ந்தது.

—தொடரும்—

கவிஞர் முரு. சொ. நாச்சியப்பன் தலைமையுரை யாற்றுகிருர்.



மலாயா நாட்டில்

கண்ணதாசன் பரம்பரையின் கவியரங்கம்!

கல்லல் கவிஞர் தலைமையில் நடந்தது.

[மலாயா நிருபர்]

மலாயாவின் எழில்கூறும் மாநகரங்களில் ஒன்று ஈப்போ அங்கு கடந்த 25-2-61-ம் நாளன்று 'தமிழர் திருமண மண்டபம்' எழுப்புவதற்கு நிதி உதவிக்காக வெகு சிறப்பாக 'கலைவிழா' ஒன்று நடை பெற்றது. கலைவிழாவில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான தமிழர்களின் உள்ளங்களின் ஆரவாரத்திடையே கண்ணதாசன் பரம்பரையின் முதல் தமிழ்க் கவியரங்கம் வெகு விமரிசையாக வாழ்த்துக் கரவொலி முழங்க நிகழ்ந்தேறியது.

மலாயாவின் முன்னணி எழுத்தாளர்களில் ஒருவரும், பிரபல சொற்பொழிவாளரும், கவிஞருமான கல்லல் திரு. முரு. சொ. நாச்சியப்பன் அவர்கள், கவியரங்கிற்குத் தலைமை ஏற்ருர்! இவர் மலாயாவின் தமிழ் நாளிதழான தமிழ்நேசனில் கடந்த ஆறு மாதங்களாக 'கண்ணதாசன் கவிதைகள் நயம்பற்றி வெகு சுவையாக எழுதிவருகிருர். அந்தக் கட்டுரைத் தொடரில் இவரால் அறிமுகப்படுத்தப்பட்டவர்களே (மலாயாவில்) கண்ணதாசன் பரம்பரையினர்.

கலைவிழாத் தலைவர் திரு. நா. கைலாசம் அவர்கள் கவியரங்கத் தலைவர் திரு. கல்லல் கவி அவர்களுக்கு மாலை அணிவித்து அவரைப் பற்றிய சிறப்புகளை மக்களுக்கு எடுத்துரைத்தபோது, கூட்டத்தில் மகிழ்ச்சி மலர்ந்தது.

தலைவரவர்கள் கவியரங்கம் நிகழ்வுறுவதற்கு முன்பாக மலாயாவில் தமிழ்க் கவிதையின் நிலையைப் பற்றியும், கண்ணதாசன் பரம்பரையைப் பற்றியும், முப்பது நிமிடங்கள் வரை சொன்மாரி பொழிந்து கவியரங்கத்தை நடத்தித்தந்தார். அதுபோது தலைவர் மொழிந்த தமிழ்த்தாய் வணக்கம் வருமாறு :—

தமிழே!

நின்னை நெஞ்சிறுத்தி ஏத்தும்
நேய மனமுடையார் எங்கள்
கண்ணின் ஒளியாவாய்! கவிதைக்
கருத்தாகித் துணைநிற்பாய் காவாய்!

—என்று, வணக்கம் செய்தபோது, கூட்டத்தினர் அமைதியே வடிவாக ஆழ்ந்தனர்.

முல்லைத் தூய்மையுளம்! முகமோசெங் கதிரவனும்!
கொல்லைப் பூமணத்தைக் கொட்டும்சொல் வீசிவிடும்!
வல்லார் தமிழ்ப்பாடும் வல்லாடும் உடலர்தான்!
நல்லார்க் குரியவனும் நம்மண்ணல் கண்ணதாசன்!

பழகு தமிழ்ப்பாடும் பாலகனும் என்நெஞ்சில்
இலகு தமிழென்று இலங்குகிற கண்ணதாசன்
உலகு போற்றிவரும் உயர்தமிழை யான்கொள்ள
வலது கரமென்று வலம்வந்து வாழ்த்துவனே!

கவிஞர் கண்ணதாசன் புகழ் பாடிய திரு. நாச்சியப்பனின் இந்தப் பாக்கள் அனைவரின் இதழ்களிலும் புன்னகையை அரும்பச் செய்தன.

கவியரங்கில் கவிஞர்கள் திரு. முத்துஇராக்கப்பன், திரு. சித இராமலிங்கம், திரு. மு. சுல்தான் ஆகியோர் பங்குபெற்றனர்.

திரு. முத்துஇராக்கப்பன் 'தமிழ் நீதி' என்ற பொருளில் சொன்னயமும் பொருள் நயமும் மிக்க கவிதையை வாசித்தார்.

திரு, சித இராமலிங்கம் 'தமிழ்க்காதல்' என்ற தலைப்பில் அக அழகை அடுக்கடுக்காய் எடுத்துக்காட்டி, காதல்நிலையை அற்புதமாக தம் கவிதையால் விவரித்தார்.

திரு. மு. சுல்தான் 'தமிழ் வீர'த்தை நிலைக்களனுய்க் கொண்டு புறநானூற்றிலிருந்து மாத்தமிழர் வீரவரலாறுகளை தம் கவிதைப் பாட்டையில் சொன்னுர்.

மலாயாவில் முதல் முதலாகத் தங்கள் கவியரங்கத்தை நடாத்தியுள்ள கண்ணதாசன் பரம்பரையினர் முதிரா இளம்பருவத்தினர். இவர்களது சிறப்புமிக்க இந்தக் கவியரங்கம் தமிழர் உள்ளங்களில் நின்று நிலைபெறும்!

திரு.மு.ரு.சொ. நாச்சியப்பன் தலைமையில் நிகழ்வுற்ற கண்ணதாசன் பரம்பரையின் கவியரங்கத்திற்கு கவிஞர் கண்ணதாசன் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தது மகிழ்ச்சிக்குரியதாக இருந்தது.

மயிலை. சீனி. வேங்கடசாமி

மணி விழா.

கடந்த 17-3-61 வெள்ளி மாலையில் சென்னை கோகலே மண்டபத்தில் சென்னை உயர்நீதி மன்ற நடுவர், தமிழறிஞர், மேதகை எஸ். கணபதியா (பிள்ளை) அவர்கள் தலைமையில், தமிழ்ப் பெருமகனுர், ஆராய்ச்சி வல்லுநர், மயிலை. சீனி. வேங்கடசாமி அவர்களின் மணிவிழா இனிது தொடங்கியது.

மயிலை. சீனி. வேங்கடசாமி அவர்களையும், மணிவிழா வரவேற்புக் குழுத்தலைவர், செந்தமிழ்க் காவலர், டாக்டர். அ. சிதம்பரநாதன் அவர்களையும், சாரணவீரரும், மாணவக் கடற்படைவீரரும், இருமருங்கும் அணிவகுத்து நிற்க, மாணவியர் பலர் பூரண கும்பமேந்தி மலர் தூவி வரவேற்றனர். மாணவியர் செல்வி, எம். எஸ். இலட்சுமி, செல்வி, காயத்திரி இருவரும் தமிழ்வணக்கம் பாடினர்,

வரவேற்புக் குழுத்தலைவர் மயிலை சீனி வேங்கடசாமியாரின் அரிய ஆராய்ச்சித் திறனையும், சீரிய பண்பாட்டு நெறியையும், விரித்துக் கூறி, மணிவிழாவுக்குவருகை தந்த அனைவரையும் வரவேற்ருர்.

மணிவிழாத் தலைவர் முன்னுரைக்குப்பின் மயிலை சீனி வேங்கடசாமி அவர்களுக்கு "ஆராய்ச்சி அறிஞர்" என்ற பட்டம் பொறித்த பதக்கம் அணிவித்துப் புத்தாடை போர்த்தினுர்.

பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்கள், மணிவிழாவை விவரித்து வெளிவந்த மலரை அரங்கேற்றி பாராட்டுரையுடன் நல்கினுர்.

பின்னர், தமிழக ஜைனமக்கள் சார்பாக திரு. ஜீவபந்து. டி. எஸ். பால் அவர்கள், மயிலை சீனி வேங்கடசாமி அவர்களால் இயன்ற "சமணமும் தமிழும்" என்ற நூலின் இரண்டாம் தொகுதி வெளியீட்டுக்காக ரூ. 2000 பணமுடிப்பு நல்கிப் பாராட்டுரை வழங்கினுர்.

தமிழ்நாடு முழுவதுமுள்ள பல்வேறு நிறுவனங்கள் சார்பில், புத்தாடைகள் மலர்மாலைகள் சூட்டப்பட்டன.

மயிலை சீனி அவர்களின் ஆராய்ச்சித்திறன், எழுத்துத்திறன், உழைப்புத்திறன், உண்மை உள்ளம், அடக்கம், எளிமை, அன்பு ஆகிய திறன்-பண்பாடுகள் குறித்து, பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரை, டாக்டர் இராசமாணிக்கனுர், அவ்வை டி. கே. சண்முகம், கி. வா. ஜகந்நாதன், டாக்டர் மு. ஆரோக்கியசாமி, ந. சஞ்சீவி, புலவர் மீ. பா. சோமசுந்தரம், அழ. வள்ளியப்பா, நாவலர் இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். கவிஞர் முடியரசன், மணிவிழாவின் சிறப்புக்களைப் பொருளாகக் கொண்ட நீண்ட கவிதை யாத்து அரங்கேற்றினுர்.

இறுதியாக மயிலை. சீனி. வேங்கடசாமி அவர்கள் அனைவர்க்கும் நன்றி கூறினுர். விழா இனிது முடிந்தது.

கவிஞர் கண்ணதாசன் வாழ்த்து

வடமலை குமரி இடையில் ஆடிய
மானத் தமிழர் வாணிபம் நாடி
கடலலை தாண்டி மலையகம் சென்ருர்
மலையிலும் தமிழை மறவா ராகி
வண்டமிழ்க் கவிதை அரங்கம் வடித்தார்!
இளந்தமிழ்க் கவிஞர் இயற்கையின் மடியில்
வளர்ந்தசெந் தமிழை வாயுற வாழ்த்தி
தொடங்கிடும் கவிதை துலங்குக யாண்டும்!

அறநிலை மறவா வணிகர் திருமகன்
அருளொடுந் தமிழை வளர்க்கும் குடிமகன்
பாவலன் சிலம்பின் பாட்டுடைத் தலைவன்
கோவலன் குடியின் குணத்தொடும் பிறந்தவன்
நாவலன் இளைருன் நல்லறி வாளனம்
நாச்சியப் பன்தமிழ் நாடொறும் பரவுக!
கவிஞர்கள் வளர்க! கவிதைகள் விளைக!
தமிழுளம் மலர்க! தமிழ்த்தாய் வாழ்க!

வாக்காளர் பட்டியல்

கழகத்தோழர்கள், ஆதரவாளருக்கு

வேண்டுகோள்

வாக்காளர் பட்டியல் திருத்த வேலை மாவட்டங்களில் மார்ச் 15 முதல் துவங்கியுள்ளது.

வாக்காளர் பதிவு அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று 15 நாட்களுக்கு தகவல் சேகரித்து வாக்காளர் பட்டியலைப் பதிவு செய்வார்கள்.

சென்னை நகரத்தில் ஏப்ரல் 5-ந் தேதி துவங்கி 15 நாட்கள் இந்தப் பணி நடைபெறும்.

இந்த ஆண்டில் தயாரிக்கப்படும் வாக்காளர் பட்டியலை அடிப்படையாகக் கொண்டே 196_-ம் ஆண்டில் பொதுத் தேர்தல் நடைபெற இருக்கிறது.

1962-ம் ஆண்டு முதல் ஐந்து ஆண்டுகளில் பாராளு மன்றம், மாநில சட்டமன்றங்கள் ஆகியவற்றின் உருவமும், அரசியல் மாறுதலும் இந்த வாக்காளர் பட்டியலைப் பொறுத்துள்ளது.

வோட்டுரிமை-இதனைப் பெறுவதற்கு மனிதகுலம் பல நூற்றுண்டுகள் மேற்கொண்ட போராட்டங்களும் சிந்திய இரத்தமும், ஏற்றுக்கொண்ட இன்னல்களும் ஓர் வீர காவியம்.

வோட்டுரிமை-நாட்டு அரசியலில் ஒவ்வொருவருக்கும் உள்ள பங்கினை விளக்கும் உரிமைப் பட்டயம்.

வோட்டுரிமை-விரும்பும்போது ஏற்றவாறு அரசியலை அமைத்துக்கொள்ள குடிமக்களுக்குக் கிடைத்துள்ள ஒப்பற்ற ஆயுதம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய நாம், வோட்டு முறையைத்தான் விடுதலை பெறுவதற்குரிய அடிப்படை ஆரம்பத் திட்டமாகக்கொண்டிருக்கிறோம்.

கழகத்திற்கு எத்தனை வோட்டுகள் விழுவதற்குரிய வழி செய்யவிருக்கிறீர்கள் என்ற பெருமைக்குரிய சிறப்பு, கழகத் தோழர்கள், குடும்பத்தினர், ஆதரவாளர்கள், ஒவ்வொருவரும் வாக்காளர்களாவதைப் பொறுத்தே இருக்கிறது. பொதுத் தேர்தலில் கழகம் பெறவேண்டிய அபரிமிதமான வாக்குகளின் எண்ணிக்கை, தகுதிபடைத்த அனைவரையும் வாக்காளர்களாகத் தூண்டி இப்போதுகழகத்தோழர்கள், ஆதரவாளர்கள் ஆற்றும் பணியில்தான் உள்ளது.

வாக்காளர் பட்டியலை அப்பழுக்கற்ற முறையிலும், மிகச் சரியாகவும் அமைக்க. அரசியல் கட்சிகள் பொறுப்பைப் பகிர்ந்து கொள்ள முன்வர வேண்டுமென்று அரசாங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகம், வாக்காளர் பட்டியல் திருத்தப் பணியில், தனக்குள்ள கடமையினையும் பொறுப்பினையும் செவ்வனே நிறைவேற்றித் தர முழு ஒத்துழைப்பைத் தருகிறது என்று அரசாங்கத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறது.

கிராமங்களில் கிராம அதிகாரிகளும், பெரிய ஊராட்சிமன்றங்களில் நிருவாக அதிகாரிகளும், நகராட்சிப் பகுதிகளில் ஆணையாளரும் திருத்தப் பட்டியலைத் தயாரிப்பார்கள்.

கலெக்டர்கள், அந்தந்த மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பொறுப்பாளர்களுடன் தொடர்பு கொள்வார்கள்.

கிராமங்கள், ஊராட்சிமன்றங்கள், நகரங்களிலுள்ள செயலாளர்கள் வாக்காளர் பட்டியல் திருத்த அதிகாரிகளுக்கு எல்லா ஒத்துழைப்பையும் அளிக்குமாறும் அந்தந்த மாவட்ட தி. மு. க, செயலாளர்கள், தங்கள் தங்கள் மாவட்டத்தில் வாக்காளர் திருத்தப் பட்டியல் வேலை செவ்வனே நடைபெற எல்லாக் கிளை, நகர, வட்ட, மாவட்டக் கழகப் பொறுப்பாளர்களைத் தூண்டுமாறும், அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளுமாறும் பொதுச் செயலாளர் கேட்டுக்கொள்கிறார்.

தங்கள், தங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறதா என்பதைப் பார்த்துக் கொள்வதும், பதிவாகியில்லாவிட்டால் தங்கள் தங்கள் பெயரை முறைப்படி பதிவு செய்து கொள்வதும் கழகத் தோழர்கள், ஆதரவாளர்கள் ஆகியவர்களின் நீங்காக் கடமையாகும்.

கடந்த பொதுத் தேர்தலின் போது(1957) இருபதாம் வயதின் விளிம்பிலே நின்றுகொண்டிருந்தவர்களிலிருந்து பதினேழாம் ஆண்டின் நுழைவு வாயிலுக்குள் புகுந்தவர் ஈருக, பல இலட்சம் வாலிபர்கள் புதிய வாக்காளர்களாக ஆகும் தகுதி பெற்றிருக்கிறார்கள். அவர்கள் ஓட்டுச்சாவடிக்குச்செல்லும் உரிமையினைப் பெற்றுகவேண்டும்.

செத்தவர் வோட்டை மற்றவர் போடும் முறையை இல்லாது செய்யவேண்டும்.

வாக்காளர்களாக ஆகத் தவறியோரை-மறந்தோரை - கவனம் எடுத்துக் கொள்ளாதவர்களை வாக்காளர்களாக்கும் பணியினை உடனடியாக மேற்கொள்ளுமாறு கிளை, நகர, வட்ட, மாவட்டக் கழக அலுவலர்களையும், கழகச் சார்புள்ள தொழிற் சங்கங்கள், சார்பு மன்றங்கள், படிப்பகங்கள், மாணவர் அமைப்புக்கள், மகளிர் மன்றங்கள் ஆகியவற்றையும் பொதுச்செயலாளர் கேட்டுக்கொள்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை நிலையம், மாநிலத் தேர்தல் தலைமை அதிகாரியுடன் தொடர்புகொண்டுள்ளது. கழக அலுவலர்களும் தோழர்களும் தங்கள் பணி குறித்தும், தேவைகள் குறித்தும் தலைமை நிலையத்துடன் தொடர்புகொள்ள வேண்டுகின்றேன்.

வோட்டுரிமை—நமது நாட்டுரிமையை நிர்ணயிக்கும்!
வயது வந்தோரே! வாளாவிராதீர்!

'அறிவகம்', சென்னை-13.,
16—3—1961

கே. ஏ. மதியழகன்,
தலைமைநிலையச் செயலாளர்,

இலங்கை தி. மு. க. குருளையர் படை

(மட்டக்களப்புக் கோட்டை முன்னல் அறப்போர்)

இலங்கைத் தமிழர் நடத்தும் அறப்போர் நாள்தோறும் வளர்ந்து வலுப்பெற்று வருகிறது.

வழக்கறிஞர் அனைவரும் அறப்போர்க்களத்தில் அணிவகுத்து நிற்கின்றனர்.

பாடசாலை ஆசிரியர்கள் அனைவரும் பள்ளிகளை மூடிவிட்டு அறப்போர்க்களத்தில் நிற்கின்றனர்.

தாய்மார்களில், மூதாட்டியரும், வாலைப்பருவ மங்கையரும், அறப்போரில் கைகோத்து நிற்கின்றனர்!

பள்ளிச்சிறுர்கள்—கல்லூரிக் காளையர் மாணவியர் அனைவரும் அறப்போர்க்களத்தில்...!

"சிங்கள ஏகாதிபத்தியம் செய்வது சரிதான்!" என்று சொல்ல விபீஷணன் பிறந்த மண்ணில் ஒருவன்கூட இல்லை! விபீஷணன் பரம்பரை வேரற்ற காரணம்; சிங்கள ஏகாதிபத்தியத்தின் செயல், விபீஷணர்களுக்குக்கூட வெறுக்கத்தக்கதாக இருப்பதே.

"அறப்போர்க்களத்தைச் சவக்களமாக்க ஆதாரம் ஏதாவது கிடையாதா?" என்று கழுகுகள் வட்டமிடுவதுபோல் மெஷின் துப்பாக்கி பொருத்திய மோட்டார் வாகனங்களும் ஆயுதந்தாங்கிய இராணுவ வீரர்களும் போலீசாரும் அறப்போர் வீரர்களையும் வீராங்கனையரையும் சுற்றிச் சுற்றி வருகின்றனர்.

மாற்றார் படையெடுப்பில் பயன்பட வேண்டிய சேனைகளும் ஆயுதங்களும் நாட்டாரின் உரிமைப்போருக்கு—அறப்போருக்கு எதிராக ஏவி விடப்பட்டிருக்கின்றன.

ஆனல், அந்த மறக்குல மைந்தர்களும், அறத்தின் செல்வியரும் அஞ்சவில்லை—ஆருயிரைப் பேணவில்லை!

மனத்தாலும் மொழியாலும் மெய்யாலும் எவரும் பிழை காணமுடியாதபடி 'அறக்கவசம்' பூண்டு நிற்பதால் அந்த வீரர் குலத்தைச் சீறிவரும் சிங்கள ஏகாதிபத்தியப் படைகளும் இயந்திரத் துப்பாக்கிகளும் பயனற்றுப் போயின!

இதயமுள்ளவர் அனைவரும் சிந்திக்க வேண்டிய பெரும்போர் இது! ஒரு நாட்டின் மக்கள் ஆடவர் பெண்டிர் இளைஞர் முதியர் சிறுர் ஆசிரியர் வழக்கறிஞர் தொழிலாளர் முதலாளர் அனைவரும் ஒருங்கு திரண்டு போர்க்கோலம் கொண்ட வரலாறு கண்டதுமில்லை கேட்டதுமில்லை!

எதற்காகவும் வாசற்படி கடந்தறியாத இசுலாத்துக் 'கோஷா' மாதர்கள் அறப்போரில் ஈடுபட்டுள்ளனர்.

எந்தப் போரிலும் ஈடுபட்டறியாத பார்ப்பன மங்கையரும் இந்தப் போரில் இறங்கியுள்ளனர்.

என்றல்,-இலங்கை ஆட்சிக்கு வெறியும் துப்பாக்கியும் குண்டாந்தடியும் தவிர அறத்தின் துணை எதுவும் இல்லை என்றுதானே பொருள்?

வெல்க அறப்போர்!

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கனம் ராய் அவர்களே!

ஜனத்தொகைப் பெருக்கத்தின் காரணம் எதுவாயிருந்தாலும் சரி; அது வியப்பூட்டும் அளவுக்கு அதிகமாக இருக்கிறது என்பதை, உங்களால் மறுக்க முடியவில்லை?

இத்தகைய பெருக்கத்தின் காரணங்களைக் கண்டறிந்து, அதற்கேற்ற திட்டங்களைச் செய்ய வேண்டிய பொறுப்பு, மேற்கு வங்க சர்க்காருக்கு உண்டு என்பதை உங்களால் மறுக்க முடியுமா?

இந்தியத் துணைக் கண்டத்தின் எந்தப் பகுதியிலும் இல்லாத அளவு திடீரென்று பெருகியுள்ள மேற்குவங்க ஜனத் தொகையைப் பற்றி, சிறிதும் கவலைப்படாமல் தூங்கிக்கொண்டிருந்ததுடன் அதனைச் சுட்டிக்காட்டிய சுப்பிரமணியத்தின் மீதும் பாய்கிறீர்களே ஏன்?

பண்பிருந்தால் சுப்பிரமணியத்திற்கு நன்றி கூறுங்கள், பண்பில்லை வெறும் ரோஷம்தான் பொத்துக் கொண்டு வருகிறதென்றால், வாயை மூடிக் கொண்டு பேசாமலாவது இருங்கள்!

அதைவிட்டு சுப்பிரமணியத்தை விசாரித்துக் கொண்டு மேல் நடவடிக்கை எடுக்கப் போகிறேன் என்று கூறுகிறீர்களே! உங்களை நினைக்கும்போது ஒரு கதை நினைவுக்கு வருகிறது,--

18 முழம் பட்டுச்சேலை உடுத்துகிற ஆடம்பரக்காரி ஒருத்தி இருந்தாள். அவள் 12 முழத்தை இடுப்பிலே சுற்றி 6 முழத்தை மாராப்புப் போட்டு 2 முழம் முந்தானையை தெருவிலே போட்டு இழுத்துக்கொண்டே நடப்பாள்.

ஒரு நாள், அவள் தெருவில் வரும்போது, அவள் பின்னால் அடுத்த வீட்டுக்காரன் வந்துகொண்டிருந்தான். திடீரென்று காற்றடித்து ஆடம்பரக்காரியின் முந்தானைச் சேலையைத் தரையிலிருந்த மண்ணுடன் கிளப்பி, அடுத்த வீட்டுக்காரன் முகத்திலே போய்த் தாக்கியது!

முந்தானை பட்ட அருவருப்பும், முகத்தில் விழுந்த மண்ணும், அடுத்த வீட்டுக்காரனுக்கு ஆத்திரமுண்டாக்கின. அவன் கேட்டான்:—

"ஏனம்மா! பெண்ணாய் பிறந்தவள் முந்தானைச் சேலையைச் சுற்றிக் கட்டிக் கொண்டால் என்ன?" என்று.

"தான் முழுச் சேலையையும்...வருவேன்! நீ யாரடா அதைச் சொல்ல?" என்றாள் அந்தச் சீமாட்டி.

கனம் ராய் அவர்களே! உங்கள் விசாரணையும், நடவடிக்கையும் அந்தச் சீமாட்டியின் நடவடிக்கை மாதிரிதானே இருக்கிறது?

சுப்பிரமணியத்தின் மேல் என்ன நடவடிக்கை எடுத்துக் கிழித்து விடுவீர்கள்?

தமிழன்-திராவிடன்தானே எதையும் சொல்லலாம் என்று சொல்கிறீரா?

பெருபாரியை இழந்தபோது "ஆய் ஊய்" என்று நீங்களும் உங்கள் சர்க்காரும் சேர்ந்து குதித்தீர்களே! என்ன ஆயிற்று?

சுப்பிரமணியத்தின் மேல் நடவடிக்கை தொடங்குமுன் மத்திய சர்க்கார் நிர்வாகம் கணக்கெடுக்கக்கூட திறமையற்றது என்று கூற வேண்டும் அல்லது—

நாங்கள் மத்திய ஆட்சியின் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை எதிர்க்கிறோம் என்றாவது சொல்லியாக வேண்டும்.

நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிடினும் இரண்டில் ஒன்றைக் கூறியாக வேண்டும்! எதைச் சொல்லப் போகிறீர்கள்? சொல்வீர்களா?

★

படித்துவிட்டீர்களா?

கண்ணதாசன்

கருத்துச் சுனை

கட்டுரைகள், கதைகள், நாடகங்கள்.

இதுவரையும் நூல் வடிவில் வெளிவராத எழுத்துச் சிற்பங்கள்.

★ தத்துவக் கட்டுரைகள் தரணியை அளக்கவல்லன.
★ இலக்கியக் கட்டுரைகள் இன்பவெள்ளம் பாய்ச்சுவன.
★ சிறுகதைகள் சிந்தனையைக் கிளறி விடுவன.
★ நாடகங்கள் நெஞ்சில் நிலைத்து நடம்புரிய வல்லன.

பைந்தமிழ்ப் பதிப்பகத்தின் முதல் முயற்சி

முத்தனைய அச்சுக்கோப்பு
சித்தங் கவரும் கட்டிடக் கோப்பு
காண்பதற்குக் கண்காட்சி
கைக்கொள்ள எழில்நீட்சி
படிப்பதற்கு மனமாட்சி
பைந்தமிழின் வளமாட்சி.

இத்துணைக்கும் விலை ரூ. 2-50

பதிவு அஞ்சலில் பெற விரும்பினால் 75 காசுகள் அதிகமாக அனுப்புக.

விற்பனையாளர்க்கு 25% கழிவு கிடைக்கும்.

விற்பனை உரிமை

தென்றல்

2/127, மவுண்ட்ரோடு சென்னை-6.

தென்றல்

ஏப்ரல் 15-ம் நாள் இதழ்

பேராசிரியர்

ரா. பி. சேதுப்பிள்ளை

அவர்களின்

வெள்ளிவிழா மலராக வெளிவரும்.

பேராசிரியரின் வாழ்க்கை வரலாற்றை பேரறிஞர் பலர் எழுதுகின்றனர்.

பேராசிரியரின் மாணாக்கர் பலர், அவருடைய வாழ்வின் சுவைமிக்க நிகழ்ச்சிகளைத் திரட்டித் தருகின்றனர்.

பேராசிரியரின் நண்பர்கள் பலர் அவருடைய நுண்ணறிவுத் திறனை வியந்து கருத்தோவியம் தீட்டுகின்றனர்.

பேராசிரியரின் மணிமொழிக் குறிப்புகள் பல இடம் பெறுகின்றன.

மலர் $7\frac{1}{2}'' \times 10''$ அளவினதாய் 32 பக்கங்களுடன் உயர்ந்த தாளில் அச்சிடப்பட்டு, பேராசிரியரின் உருவோவியம் முகப்பை அழகு படுத்த சிறப்புடன் வெளிவருகிறது.

விலை 25 காசுகள்.

விற்பனையாளர்களின் மிஞ்சிய தேவைகளை விரைந்தெழுத வேண்டுகிறோம்.

நிர்வாகி,
தென்றல்
சென்னை-6.

1-ம் பக்கத் தொடர்ச்சி

பேச்சாளன் ஒருவன் மேடையில் பேசுவதாக வைத்துக்கொள்வோம்.

ஊன்றிக் கவனித்தால் அங்கே அவன் முத்தமிழ் கொண்டு முழங்குவதைக் காணலாம்.

சிலப்பதிகாரம் இராமாயணம் திருக்குறள் முதலான நூல்களை ஊன்றிக் கவனித்தால் அவற்றில் முத்தமிழும் வரிவடிவத்தில் நிற்பதைக் காணலாம்,

தாய் ஒருத்தி குழந்தையை தாலாட்டும் போது முததமிழும் முழங்குகின்றன.

கணவனை இழந்த மனைவி ஒருத்தி கதறி அழும்போதும் முத்தமிழ் முழங்குவதைக் காணலாம்.

அபிநயம் என்பது கையால் மெய்யால் காட்டப்படுவதுமட்டுமல்ல—முகத்தில் ஏற்படும் பாவங்களும் அபிநயத்தின் உறுப்பேயாகும்.

ஆகவே, குழந்தையைத் தாலாட்டும் தாய்க்கும் கணவனை இழந்த மனைவிக்கும் முகத்தில் ஏற்படும் உணர்ச்சி பூர்வமான குறிகள் அபிநயத்தின் பகுதி என்றே கொள்ள வேண்டும்.

அப்படியானால் எல்லா மொழிக்குமே இந்த தன்மைகள் இருக்கின்றனவே! தமிழுக்கு மட்டும் தனிச் சிறப்பு என்பது எங்ஙனம்? என்று கேட்கலாம்.

கேட்பது நியாயந்தான்! எல்லா மொழியினருக்கும் இசையும் கூத்தும் உண்டல்லவா? அவை தனித் தனிக் கலையாக எல்லா மொழிகளிலும் இருக்கின்றன. அப்படிப்பட்ட கலைகளை தமிழுக்கு மட்டும் உரிமையாக்கிக் கூறுவது எப்படி?

இங்கேதான் சற்று உய்த்துணர வேண்டும். விரித்துக் கூற இடமில்லை.

இயல், எப்படி தமிழுக்குள் பிரிந்து நிற்காமல் அடங்கி-நிற்கிறதோ,

அதுபோலவே, தமிழுக்குள் அடங்கி, தமிழின் தத்துவமாக—அதன் உறுப்புக்களாக இயலும், இசையும், கூத்தும் உள்ளன.

மற்ற மொழிகளில் அவ்வாறில்லை என்பதை தக்கார் மூலமாக அறிந்துணர்க.

வெண்பாப் போட்டி 16.

★

ஈற்றடி

தென்னிலங்கை முட்டிவரும் தீ

இறுதி நாள் 1-4-61.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை-6

வெண்பாப் போட்டி

16. தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

தாய்மொழியை, இன்பத் தமிழமுதைக் காத்திடற்கு
மாய்ந்திடினும் அஞ்சோம்; மடிகொள்ளோம்!—என்றார்த்தே
இன்றெழுந்த யெம்மினத்தால் இல்லாகிப் போகும்காண்
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—பழனி. முத்துதாசன், சென்னை-30.

கண்ணீர் மழைபொழியப் புண்ணீர் நிலம்பெருக
மண்ணிலீ ழத்தமிழர் மாள்கின்றார்;—கண்ணியமோ
மின்னிலங்கு வேல்தானை மீன்கொடியோன் முன்னாண்ட
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—சா. கா. சாகுல்அமீது, சித்தையன்கோட்டை.

உண்ண உணவின்றி ஒண்டக் குடிலின்றி
மண்ணோடு மண்ணாக மாய்ந்திடினும்—கண்ணான
தன்மொழியைக் காப்பான் தமிழ்க்குலத்தோன்! இந்நிலையே
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—தி. குமாரராசு, சென்னை-1.

ஊக்கம் குறைவதில்லை உள்ளத் துரிமையென்னும்
ஆக்க உணர்வொன்றே ஆழ்ந்தூன்றில்—தீக்கடையோர்
இன்னுயிரை யீந்தும் இதற்கீடு செய்யவரும்
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—மதிஒளி, சென்னை-5.

தென்னவன் வாழ்ந்திட்ட தென்திக்குத் தீவினில்
மண்ணெல்லாம் தேயிலையாய் மாறியதே—கண்ணில்லா
சிங்களவர் போவென்று சீறிப் பகைக்கொள்ளல்
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—எஸ். கே. வெங்கடேசன், சென்னை-7.

பனிக்கடல் மோதும்நம் பைந்தமிழ் நாட்டின்
தனிப்பெருமை மாய்ந்த தரைமேல்—இனிப்புறும்
என்தமிழன் நெஞ்சில் இனஉணர்ச்சி ஏற்றாதோ?
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—பத்மா, சென்னை-12.

பண்டைத் தமிழகம் பாரில் பரந்ததென்று
கெண்டை யெனத்துள்ளும் சிங்களவர்—கண்டதில்லை!
எந்நாள் பிறந்தார்? எனஅறியார்! வாழவோ!
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—அ மேகநாதன், அச்சரப்பாக்கம்.

தென்னகத்து நற்றமிழர் தேன்வாழ்வைத் தீய்த்திட்டார்
தென்னிலங்கை யோர்வெறியாம் தீயாலே—என்றாலும்
இன்னமும்நம் ஆட்சியர்தம் உள்ளம் இளகாதோ
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—கமலன், சென்னை-5.

மண்ணையும் பொன்னாக்கி, மாத்தமிழால் பாத்தொடுத்து
எண்டிசையும் வென்றீழம் அன்றாண்டான்—என்கோதாய்
இன்றந்தச் சிங்களத்தில் இன்தமிழைப் பற்றிடுமோ?
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—அவா. இன்பதாசன், சென்னை-1.

உன்மனந்தான் கல்லோ? உணர்வற்றுப் போயினதோ?
என்னிங்கு வாழுகின்றாய்? என்னதான் செய்கின்றாய்
மானம் உனக்கிலையோ? மாத்தமிழைச் சூழுதடா
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—வெளிவை சு. இளவழகன், நாகப்பட்டினம்.

கட்டுக் கடங்காத காட்டு மொழிவெறியால்
சுட்டுப் பொசுக்குவதைச் சோர்ந்தினியும்—விட்டுவைத்தால்
கன்னல் தமிழினத்தைக் கட்டோ டழித்துவிடும்
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—கோ. சோ. ஜெயபால், தெற்குப் பொய்கைநல்லூர்.

வெங்கொடுமை வேல்வீசி வேதனையை ஏற்றுகின்றார்
பொங்குதமிழ் நெஞ்சத்தில் பூவையே!—எங்கள்பூந்
தென்றல் திசைமாறி சீறும் புயலாகும்
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—எழில்பாரதி, கீழக்கடையம்.

அமிழ்தென்போம் யாருக்கும் அஞ்சாத சிங்கம்
தமிழ்என்போம் எல்லாம் தலைநாள்!—தமிழாஉன்
தொன்மைச் சிறப்புணர்வை சுட்டேனும் தூண்டாதோ
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—டி. கே. விசுவநாதன், சேலம்-5.

மங்காப் புகழ்சேர்த்த மாத்தமிழர் கூட்டத்தைச்
சிங்களவர் இன்று சிதைக்கின்றார்—இங்கிதமாய்
இன்னலினைப் போக்கிடுவர் எந்தமிழர் அஞ்சுவரோ
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—கோ. மிருதஞ்செயன், சென்னை-30.

இன்பத் தமிழ்மொழிக்கு எத்தர்களாம் சிங்களவர்
இன்னல் விளைத்தே இகழ்ந்திடினும்—என்குலத்தோன்
தன்னுயிரை யீந்துந் தமிழ்காப்பான்! என்செய்யும்
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—பொ. வெங்கடேன், சென்னை-1.

அத்தானேன் வாட்டந்தான்! என்றாய் அழகரசி
நித்தம் தமிழர் நிலைகுலைவு—சித்தத்தில்
நின்றழித்தல் போதாமல் மேலும் நெருங்கிடுதே
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—மு. கோவிந்தராசன், திருப்பத்தூர்.

திக்கெட்டும் பேர்பெற்ற தென்னகத்தின் சந்ததியார்
இக்கட்டாய் இன்றே இருத்தலேன்?—பக்கத்தில்
தொன்மைநம் வீரமின்று தொய்ந்து கிடத்தலே!
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

அ. மேகநாதன், அச்சரப்பாக்கம்.

செய்ந்நன்றி கொல்லும்தீ! செந்தமிழை மாய்க்கும்தீ!
மெய்கருக்கி உய்வெரிக்க மேவுந்தீ!—ஐயகோ!
பொன்னாக மண்ணைப் புதுப்பித்தோர் வாழ்வொழிக்கும்
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—இராயகிரி ரமணீயன்பாலா, குப்பம்.

நடத்துகின்றார் நாய்போல் நடுத்தெருவில்! நம்மோர்
அடிபடுவார்! உற்றார் அதனால்—துடிபடுவார்!
இன்னல்பல செய்வார்! இவைஅச் சிரிமாவின்
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—சா. கண்ணன், விருத்தாசலம்.

கண்ணெனப் போற்றும்நம் கன்னித் தமிழுக்குப்
பெண்ணரசில் கூடவா பாதகம்?—உண்மையால்
சென்னையும் கூடித் தெளித்தால் அணையாதோ
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—தன. வள்ளுவன், மஞ்சைநகர்.

காங்கோவில் காணாவில் காட்டும் கவலையினை
சிங்களத்தில் நேரு செலுத்திடார்—மங்கையே!
இந்நாட்டி லுள்ள இழிநிலையின் தீவினையே
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—திருமகன், தேவகோட்டை.

கண்ணான காதலியே! கண்மணியே! முன்னிதழ்போல்
என்னாளுந் தேனாகும் பாவெழுத,—பெண்ணணங்கே
உன்னநம் காதற்கும் ஊறாக மூண்டதே
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—முகிற்கோன் செங்கற்பட்டு.

தீவிலங்கை எம்மால் செழித்ததுகாண்! இன்றெம்மைத்
தீவிலங்கைக் காண்பதுபோல் சீறுகிறார் சிங்களவர்
எண்ணில், திருவழித்து அன்னவர்க்கே கூற்றாகும்
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—செல்லம், ராம்நகர்.

சில்லென்று நீதந்த சிட்டுமுத்தம் என்னெஞ்சில்
முள்ளென்று குத்துவதேன்? மொய்குழலே—சொல்லென்றேன்!
உன்நினைவு வெந்தழல்மேல் ஓடுதென்றாள்! ஆம்! அதுதான்
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—அர. தமிழன்பன், விருத்தாசலம்.

தோமான்

கண்ணதாசன் படைக்கும்

கற்பனை உலகம்

ஆங்கிலத்து 'உட்டோப்பியா'வைப்போல் ஒரு புதிய உலகம். புதுவகை மக்களின் படம். தேசத்தின் படம். மக்களின் ஆடை வகை. இடையில் புதுமுறைக் கதை.

தமிழுலகம் மறக்க முடியாத படைப்பு.

தோமானியக் கவிஞன் 'மார்தோமன்' பல தத்துவங்களைச் சொல்கிருன்.

அழகி 'மாகினி' அறிமுகம் ஆகிருள்.

ஜனநாயகம், சர்வாதிகாரம் இரண்டுக்கும் அப்பாற்பட்ட அரசியல் முறை உருவாக்கப் படுகிறது.

புதிய மதம் தோமானியரின் மதமாக உருவாகிறது.

ஏப்ரல் 15உ இதழ் முதல்

தென்றல் காண்க!

ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர் : இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு